Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-23 | 09.10-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-234



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12956)

# தென்னாசியாவின் வடக்கில் பாரிய பூகம்பம்

# பாக். இல் ஆயிரக்கணக்கானோர் பலி; இந்தியாவில் 300க்கு மேற்பட்டோர் மரணம்

## தொடர்மாடிக்கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன
## பலநூற்றுக்கணக்கான கிராமங்கள் புதையுண்டன

(இஸ்லாமபாத்-டில்லி)

**தென்னாசியாவின் வடபகுதியில் நேற்று ஏற்பட்ட பாரிய பூகம்பத்தில் பாகிஸ்தானிலும் இந்தியாவிலுமாக 3000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு பல்லாயிரக்கணக்கானோர் படுகாயங்களுக் குள்ளாகியுள்ளனர். பலநூற்றுக்கணக்கான கிராமங்கள் மண் மேடாகியுள்ளன. பாகிஸ்தானில் பலதொடர் அடுக்கு மாடிக் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இப்பூகம்பத்தில் இறந் தோர்தொகைஇன்னும்அதிகமாகஇருக்கலாம்என அஞ்சப் படுகின்றது.**

பாகிஸ்தானின் வடபிராந்தியத்தில் நேற்றுக் காலை 9.17 மணிக்கு ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தினால் 2500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 200 ற்கு மேற்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர்,

(12 ஆம் பக்கம் பார்க்க)



## கனகராயன் குளத்தில் வீதிவிபத்து; இரு சிறுவர்கள் உயிரிழப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 நெடுஞ்சாலையின் கனகராயன்குளப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் கனகராயன் குளப் பகுதியில் பெரியகுளம் பாடசாலை முன்பாக இடம் பெற்ற வாகனவிபத்தில் சிக்கி இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது; கனகராயன் குளப பகுதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் மீது வவுனியாவிலிருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு வன்னிக்கு வருகை தரக்கூடும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான பயணத் தடையைத் தொடர்ந்து இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் குழு வருகைதரக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம்,சர்வதேச சிறார் பாதுகாப்பு அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம்பெறக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

தமிழீழப் பகுதிகளுக்குச் சென்று உண்மை நிலைகளை இக் குழுகண்டறிந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிக்கையைத் தாக்கல் செய்யும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை இனப்பிரச்சினைக்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் லெப்.மாலதி நினைவு நாள் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள்

### சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் இரண்டாம் லெப்மாலதியின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளும் நாளை தமிழீழ பிரதேசம் எங்கும் சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மல்லாவியில் நாளை மாலை நிகழ்வாக பிற்பகல் 4.30மணிக்கு மாவீரர் மண்டபத்திற்கு முன்பாக இருந்து 2ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பாண்ட்வாத்திய இசையுடன் யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தைச் சென்றடைந்து நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற இருக்கின்றது.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக எழுச்சிக் கானங்கள் கொள்கை முன்னெடுப்பு பிரிவினரால் வழங்கப்படுகின்றது. எஸ்.பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் உருவான உனக்குள் நிலவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சிறப்புற நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சிமாநாடு


(செட்டிகுளம்)

வவுனியாவில் இரண்டாவது முறையாகவும் தமிழீழ பெண்கள் எழுச்சி மாநாடு நேற்று வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெற்றது.

காலை பத்து மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை மாவீரரின் தாயாரான சரஸ்வதி ஏற்றினார். இதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் பெருமளவான பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் இணைப்பு



2 ஆம் லெப். மாலதியின் உருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக் கப்பட்டுள்ளது.

## பாலியல் தொடர்பிற்கான வயதுக் குறைப்பிற்கு வவுனியா பெண்கள் மாநாட்டில் கண்டனம்

(வவுனியா)

பெண்களது பாலியல் தொடர்பிற்கான வயது குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வவுனியாவில் இடம்பெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சிமாநாட்டில்கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தக் கண்டனப் பிரகடனம் சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அந்தக் கண்டனப் பிரகடனத்தில்:

பெண்களது உரிமைகள் மனித உரிமைகளின் உள்ளடக்கமாக விளங்குகின்றது. சமூக விடுதலையின் இணைபிரியாத அங்கமாகவும் திகழ்கின்றது. பெண்கள் உரிமைகள் பற்றிய சாசனங்கள் எழுத்துருவம்பெற்றிருந்தாலும் கூட நடைமுறைச் சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகவேயுள்ளன. இந்நிலைகளில் கடந்த பல தசாப்த கால யுத்த சூழலில் பெண்கள் தங்கள் உடைமைகளை, உயிர்களை, தமது பெண்மையை இழந்து சீரழிக்கப்பட்டார்கள். கிராமப்புறங்களில் வாழ்ந்த பெண்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணவில்லை

வைத்திலிங்கம் பார்த்தீபன் என்பவரது எருதுமாடு ஒரு சோடி (வெள்ளை குறி-ப, கறுப்பு K.Sகுறி) ஊற்றுப் புலம், முறிப்பில் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் ஊற்றுப் புலத்திலுள்ள வைத்திலிங்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும். (6414)

### காணி விற்பனைக்குண்டு

இராமநாதபுரம்296-5 ஆம் யூனிட்டில் அமைந்துள்ள குடியிருப்புக்காணி (2ஏக்கர்) அதனுடன் இணைந்த வயல் காணி (3+3=6 ஏக்கர்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- கோகுலன் விற்பனை நிலையம், சந்தையடி, வட்டக்கச்சி.0714-814977 (6827)

### *10 நிமிடத்தில் படங்கள்!!!*

அவசர தேவைக்கான பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும் உடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம்,டியுறோ பிறேம்,சகல லமினேசன் வேலைகளுக்கும்!!! (காலை 7.30 மணி தொடக்கம் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்)யாழ். ஒளி K.S.R.PGOTOS) இல.05 கனகபுரம் தெரு,கிளிநொச்சி (பேருந்து நிலையம் ,சந்தை அருகாமை (6802)

### *காணி விற்பனைக்குண்டு*

7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக் குடியிருப்பு பொக்கணை வீதியில் அமைந்துள்ள தென்னை பிரயோசனங்களுடன் கூடிய 1/4 ஏக்கர் அளவு காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி செ. பாலன்,ராஜ் அழககம், முல்லைத் தீவு வீதி,புதுக்குடியிருப்பு. (6622)

---

# மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

*குவைத், துபாய்,சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு*

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரிங் வேலை அனுபவம் கொண்டதச்சுத் தொழிலாளர்கள் | (SHUTTERING CAR PENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்குப் பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர்வர்ணம் தீட்டுவோர். | (WALL PAINTER) |

*தொடர்புகளுக்கு*

## RAIN BOW TRAVELS & TOURS

*321/2 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.*
*ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில்* Tel: 0777,328219–0212223237

(சி. 13015)

---

## கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டிப் பரிசளிப்பு விழா–2005

இடம் :-யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
காலம் :-10.10.2005 திங்கட்கிழமை
நேரம் :-மாலை 3 மணி
தலைவர்:-கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி,யாழ்ப்பாணம்தேசியகல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர் :- திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர்,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
சிறப்பு விருந்தினர் :- திரு.K. சிவராமலிங்கம்
(முகாமையாளர்,இலங்கை வங்கி ,2 ஆம் கிளை,யாழ்ப்பாணம்)
திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர்,யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

### நிகழ்ச்சி நிரல்

*மங்கல விளக்கேற்றல்
*இறைவணக்கம்
*வரவேற்புரை : செல்வி. ஜே.றொக்சினி (முகிழ்நிலை ஆசிரியா)
*வாழ்த்துரை : திரு. எஸ்.கே. யோகநாதன்
மேலதிக பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
*தலைமையுரை :கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி)
*நோக்கவுரை :திரு. த. சிவகுமார்
(கல்வியியலாளர்,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி)
*சிறப்பு விருந்தினர் உரை,
*பிரதம விருந்தினர் உரை
*படி–ஆசிரியர் வாண்மை இதழ் வெளியீடு
*வெளியீட்டுரை : திரு.பா.தனபாலன்,உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடும்.
*பரிசளிப்பு
*நன்றியுரை செல்வன் யோ. துஸ்யந்தன் (முகிழ் நிலை ஆசிரியர்)
*கல்லூரிக் கீதம் –

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்ப்பாணம்,தேசியக்கல்வியியற் கல்லூரி,கோப்பாய்

(சி. 13020)

---

# 2005/ 2006 ஆம் ஆண்டுக்கான காலபோகச் செய்கைக்கான கால அட்டவணை

# அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1983 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட நீர்ப்பாசனச் சட்டத்தின் (அத்.453) 19 (1) ஆம் பிரிவின் கீழும் 1979 ஆண்டு 58 ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தின் 42 (1) ஆம் பிரிவின் கீழும் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர்/மாவட்ட ஆணையர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகிய நான்.

கீழ்வரும் பாரிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழுள்ள வயல் காணிகளில் 2005 /2006 ஆம் ஆண்டுக்கான காலபோக செய்கைக்கான கால அட்டவணையானது கீழ்வரும் அட்டவணைப்படி அமையும் என்பதனை இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

| இல | நடைமுறைகள் | வவுனிக்குளப் பிரிவில் உள்ள அனைத்துக் குளங்களும் | உடையார் கட்டுக் குளம் | முத்துஐயன்கட்டு குளம் |
|---|---|---|---|---|
| 01 | முதல் நீர் விநியோகம் | 20.11.2005 அல்லது குளத்தில் உள்ள உச்ச கொள்ளளவு நீரின் 1/3 இதில் எது பிந்தியதோ அதுவாக அமையும் | 20.11.2005 | |
| 02 | விதைப்பு இறுதித்திகதி | 15.11.2005 | 10.11.2005 | 31.10.2005 |
| 03 | வதைக்க வேண்டிய பயிரினம் | நெல் 4 மாதம் | நெல் 4 மாதம் | நெல் 4 மாதம் |
| 04 | விதைப்புமுறை | புழுதி | புழுதி | புழுதி |
| 05 | விதைப்புவிஸ்தீரணம் | முழுவதும் | முழுவதும் | முழுவதும் |
| 06 | கடைசி நீர் விநியோகம் | 20.03.2006 | 10.03.2006 | |
| 07 | பிரதான வாய்க்கால் துப்புரவு செய்ய வேண்டிய கடைசித் திகதி. | 15.11.2005 | 15.11.2005 | 10.11.2005 |
| 08 | கிளை வாய்க்கால் துப்புரவு செய்தல். | | | |
| | முதல் தடவை | 15.11.2005 | 15.11.2005 | 10.11.2005 |
| | இரண்டாம் தடவை | 15.01.2006 | 15.01.2006 | 10.01.2006 |
| 09 | கால்நடை கட்டுப்படுத்தல் | 25.10.2005 – 15.04.2006 | 15.10.2005 – 20.03.2006 | 15.10.2005 – 20.03.2006 |
| 10 | சூட்டடிப்பு இறுதித்திகதி | 15.04.2006 | 20.03.2006 | 15.02.2006 |

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.13018)

---

# ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி

## *(துறைசார் ஆலோசனை வழங்குநர், நிர்மானதாரர்)*

## பணிநிலை வேண்டுகை

கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**1.கணக்காளர்**

தகைமை :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவ மட்டத்திலான கற்கை நெறி ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

நிறுவனம் ஒன்றில் கணக்காளராகப் பணியாற்றிய மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**2.கணக்குப் பதிவாளர்**

தகைமை :- க.பொ. த(உ/த) வர்த்தகப்பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

நிறுவனம் ஒன்றில் கணக்குப் பதிவாளராக பணியாற்றிய மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**3.காசாளர்**

தகைமை :- க.பொ. த(உ/த)த்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.:

அல்லது

நிறுவனம் ஒன்றில் கசாளராகப் பணியாற்றிய மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**4.கணினித்தரவுப்பதிவாளர்**

தகைமை :- க.பொ.த(ச/த)த்தில் சித்தியடைந்திருப்பதுடன் (Ms.Office) கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் 1 வருடத்திற்குக் குறையாத பணிப்பட்டறிவு இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்

*ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,*
*45A கனகபுரம் – கிளிநொச்சி,*

*காலம்: –12.10.2005 (புதன்)*
*நேரம்:- காலை 9 மணி தொடக்கம் 12.00 மணிவரை*

**பணிப்பாளர்,**
**ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,**
**45 A கனகபுரம்-கிளிநொச்சி.**

(சி.13051)


---

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு


ஆசிரியர் கல்வித்துறை சீர்திருத்தங்களை அறிந்துகொள்ள

நெருக்கடிக்கு உட்படும் பிரதேசங்களில் ஆசிரியர் வகிக்கும் பங்கு.



பாகிஸ்தானில் நேற்று ஏற்பட்ட பாரிய நில அதிர்வில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று தரை மட்டமாகிக் கிடப்பதையும், உறவினர்களை இழந்து கதறியழும் பெண்களையும், சிறுவர்களையும், இடிபாடுகளுக்குள் அகப்பட்டு காயமடைந்தவர்களால் நிரம்பி வழியும் வைத்தியசாலையையும், படங்களில் காணலாம். இந் நில அதிர்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடவுள் உத்தரவிட்டதால் ஈராக் மீது தாக்குதல் நடத்தினேன்- ஜோர்ஜ்புஷ்



(லண்டன்)

'கடவுள் உத்தரவிட்டதால் ஈராக் மீது படையெடுப்பு நடத்தினேன்' என்று அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார். பீ.டி.சி.தொலைக்காட்சி 'எலுசிவ் பீஸ் இஸ்ரேல் அண்ட் அராப்ஸ்'என்ற பெயரில் பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து ஒரு செய்திப் படத்தை தயாரித்துள்ளது. அதிலே மேற்படி விபரம் வெளியாகியுள்ளது.

மூன்று பகுதிகளைக்கொண்ட இந்த நிகழ்ச்சி வரும் 10,17 மற்றும் 24ஆம் திகதிகளில் ஒளிபரப்பாகிறது. இதில் பலஸ்தீனத்தலைவர் மக்மூத் அப்பாஸ், பலஸ்தீன அமைச்சர் கபில்சாத் ஆகியோரின் பேட்டிகளும், இடம் பெற்றுள்ளது. இப் போட்டியில் அவர்கள் கூறியிருப்பதாவது:-

கடந்த 2003ஆம் ஆண்டு யூன் மாதம் சனாதிபதி புஷ்ஷை நாங்கள் சந்தித்தோம். அப்போது அவர் எங்களிடம், "பலஸ்தீன நாட்டை உருவாக்கும்படி கடவுள் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார் என்று கூறினார்.

கடவுள் கட்டளையிட்டபடி தான் நான் நடக்கிறேன் என்று கூறிய புஷ் தொடர்ந்து கூறியதாவது:-

கடவுள் தான் "புஷ் நீ ஆப்கானிஸ்தான் சென்று தீவிரவாதிகளை எதிர்த்துச்சண்டை போடு" என்று கூறினார். அதன்படி தான் நான் நடந்து கொண்டேன்.

அதன் பின் கடவுள் என்னிடம் "ஜோர்ஜ்,ஈராக் சென்று அங்கு நடக்கும் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டுங்கள்"என்று கூறினார். நான் அதன் படி செய்தேன்.


இப்போது கடவுள் என்னிடம் பலஸ்தீனியர்களுக்கு அவர்களின் நாட்டைப்பெற்றுக்கொடு என்று கூறியிருக்கிறார். இஸ்ரேலியர்கள் பாதுகாப்பாக வாழ வழி செய்து கொடு என்றும் மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுத்து என்றும் கூறியிருக்கிறார். அதை நிறைவேற்ற நான் முயற்சி செய்து வருகிறேன்.

இவ்வாறு புஷ் கூறினார்.


கடவுள் கட்டளைய்யை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருக்கிறது. பலஸ்தீனத்தை பலஸ்தீனியர்களுக்கு பெற்றுத்தருவேன் என்று புஷ் கூறினார்.

இவ்வாறு பலஸ்தீனத் தலைவர்கள் கூறினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இடம் பெற்றுள்ளவை வெள்ளை மாளிகைக்குத் தெரிவிக்கப்பட்டது. இது பற்றி கருத்துத் தெரிவிக்க வெள்ளை மாளிகை மறுத்து விட்டது.



பாகிஸ்தானில் நிலஅதிர்வால் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் பொலிசாரையும், இராணுவத்தினரையும முதலாவது படத்திலும், மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொதுமக்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.



பாகிஸ்தானில் இஸ்லாமபாத் அருகே மாங் கிராமத்தில் உள்ள மசூதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில்தொழுகையில்ஈடுபட்டிருந்த எட்டுப் பேர் கொல்லப்பட்ட பகுதியைப் பார்வையிடும் பொது மக்கள்

# வழிபாட்டுத் தலத்தில் இனந்தெரியாதோர் தாக்குதல் பாகிஸ்தானில் 8பேர் பலி; 18பேர் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் வழிபாட்டுத் தலத்தில் இருந்த ஒரு பிரிவு முஸ்லிம்கள் மீது மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் சரமாரியாகச் சுட்டத்தில் எட்டுப்பேர் பரிதாபமாக உயிரிழந்த னர். 18 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் இருந்து 160 கி.மீ.தொலைவிலுள்ளது மாங் கிராமம். மந்தி பாகுதின் என்ற நகருக்கு அருகில் பஞ்சாப் எல்லையை ஒட்டியும், இந்தக் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 'அஹ்மதி' என்ற முஸ்லிம் பிரிவினர் மசூதியில் நேற்று முன்தினம் அதிகாலை வழிபாடு நடத்திக் கொண்டிருந்தனர். ஏராளமானவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மூன்று உந்துருளிகளில் வந்த முகமூடி அணிந்த சிலர் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். இந்தத்திடீர் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இரண்டு பேர் மருத்துவமனை யில் இறந்தனர். மேலும் 18 பேர் காயமடைந்தனர். முஸ்லிம்களின் நோன்புக் காலமான ரம்ழான் மாதத்தில் 'அஹ்மதி' பிரிவு முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இது. இந்தப் பிரிவினருக்கு எதிரான பிரிவைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.



2005 உலக அமைதிக்கு பாடுபட்ட வர்களுக்கான நோபல் பரிசு சர்வதேச அணுசக்தி கழகத்தின் தலைவர் அல்பராடிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.


# சட்டவிரோதக் குடியேற்றிகளின் பரிதாபநிலைக்கு கொபிஅனான் கவலை

ஆபிரிக்க நாடுகளிலிருந்து சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் மொறோக்கோவிலிருந்து ஸ்பெயினுக்குக்குள் கடந்துசெல்ல முற்படுகையில் ஏற்படும் பரிதாப நிலை பற்றி ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் கவலை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையை மனிதாபிமானத்துடன் அணுகுமாறு ஸ்பெயின் மற்றும் மொறோக்கோ அரசாங்கங்களை அவர் கேட்டுள்ளார். ஆறு சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மதில் ஒன்றைத் தாண்டி ஸ்பானிய பிரதேசத்திற்குள் ஊடுருவ முயற்சித்தபோது இறந்துள்ள சம்பவத்தை யடுத்து கொபிஅனான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நிறுவனம் ஒன்று தெரிவித்த தகவலில் சகாரா பாலைவனத்தில் 500 இற்கும் அதிகமான குடியேற்றக்காரர்கள் உணவும் நீரும் இன்றி மொறோக்கோ பொலிசாரினால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்று கூறியுள்ளது.

இவர்களில் அநேகமானவர்களை ஸ்பானிய பொலிசார் சட்டவிரோதமான முறையில் வெளி யேற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் டெகசாஸ மாநிலத்தில் உள்ள இறப்பர் தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அது கொழுந்து விட்டு எரியும் காட்சி.

# தீவிரவாதிகள்-இராணுவம் தொடர் மோதல் மலேசியாவுக்கு இடம்பெயரும் முஸ்லிம்கள்

தாய்லாந்தின் தெற்கு மாகாணங்களில் வசிக்கும் முஸ்லிம்கள் மலேசியா நாட்டுக்கு கும்பல் கும்பலாக தப்பிச் செல்கின்றனர். உள்ளூர் தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் இராணுவம் இடையே நீண்டகாலமாக நடக்கும் போர் மீது வெறுப்படைந்துள்ளதால் முஸ்லிம் மக்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் புத்த மதத்தினரின் ஆட்சி நடந்து வருகிறது. இந்த அரசை எதிர்த்து தெற்குப்பகுதி மாகாணங்களை சேர்ந்த தீவிரவாத அமைப்புக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன. இவர்களை அடக்க புத்த மத அரசு 30 ஆயிரம் இராணுவ வீரர்களை அப்பகுதியில் நிறுத்தியுள்ளது. கடந்த 21 மாதங்களாக இருதரப்பினரிடையே இடைவிடாத கெரில்லாப்போர் நடந்து வருகிறது. இதில் இதுவரை 900 பேர் இறந்துள்ளனர்.

# பணயக் கைதிகளின் தலையைத் துண்டிக்காதீர்கள் சுட்டுக்கொல்லுங்கள் அல்-ஹைதா உத்தரவு

(பாக்தாத்)

ஈராக்கில் மறு சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் வெளிநாட்டினரையும், அமெரிக்கப் படையினரையும், தீவிரவாதிகள் கடத்திச் செல்வது வழமை. அவர்களை பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு பல்வேறு நிபந்தனைகளையும் விதிப்பதும் வழமை.

நிபந்தனைகளை ஏற்காவிட்டால் பணயக் கைதிகளின் தலையைத் துண்டித்து தீவிரவாதிகள் கொலை செய்து விடுகிறார்கள். இதே போல ஆப்கானிஸ்தானிலும், பணயக் கைதிகளை தீவிரவாதிகள் தலையைத் துண்டித்து கொலை செய்கிறார்கள்.

இந்த நிலையில் அல்-ஹைதா இயக்கத்தின் மூத்த தலைவரும் பின்லேடனின் வலது கையாக திகழ்பவருமான அய்மான் அல் சவாகரி தீவிரவாத தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் பணயக்கைதிகளை தலை துண்டித்துக்கொலை செய்யாதீர்கள். அதற்குப் பதிலாக அவர்களைச் சுட்டுக் கொல்லுங்கள். ஈராக்கில் கார்க் குண்டு தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களை கொல்ல வேண்டாம். அமெரிக்க படையினரையும், அவர்களை ஆதரிக்கும் ஈராக் இராணுவத்தினரையும், மட்டும் கொல்லுங்கள்" என்று கூறியிருக்கிறார் இந்தக் கடிதம் அமெரிக்க இராணுவத்தினரின் கைகளில் சிக்கியி ருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தொழில் மேம்பாட்டை கருத்தில் கொண்டு
# 192 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ மக்களின் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்தும் வகையில் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் தொழில் ரீதியாக அனுபவம் இருந்தும் அத்தொழிலினை மேலும் விஸ்தரிக்க முடியாத மக்களுக்கு தொழிலை மேம்படுத்தும் வகையில் மீளளிப்புக் கடன்களை வழங்கி வருகின்றது.**

இந்த வகையில் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 192 பயனாளிகளுக்கு 99,38123 ரூபாவினை மேற்படி வங்கியினால் மீளளிப்புக் கடனாக வழக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சுயதொழில் கடனாக 103 பயனாளிகளுக்கு 32,05,000 ரூபாவும் தொழில் துறைமேம்பாட்டுக்கடனாக 12 பயனாளிகளுக்கு 12,28,000 ரூபாவும் சோலர் கடனாக 32 பயனாளிகளுக்கு 17,06,113 ரூபாவும் உழுபொறி கடனாக ஒரு பயனாளிக்கு 1,50,530 ரூபாவும் உந்துருளி கடனாக மூன்று பயனாளிகளுக்கு 1,95,000 ரூபாவும் அறுவடை இயந்திரக் கடனாக இரு பயனாளிகளுக்கு 5,96,880 ரூபாவும் ஏனைய கடனாக 39 பயனாளிகளுக்கு 28,56,200 ரூபாவும் மீளளிப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## இராணுவ ஆக்கிரமிப்பை அகற்ற வவுனியா அரச அதிபரிடம் கோரல்

(செட்டிகுளம்)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக பொது இடங்கள் அரச கட்டடத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியிருக்க வேண்டிய நிலையிலும் இன்றுவரை இராணுவத்தினர் ஓமந்தை, செட்டிகுளம், பேயாடிகூழாங்குளம், பம்பைமடு எல்லப்பர் மருதங்குளம் போன்ற இடங்களில் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான கட்டடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்து நிலைகொண்டு உள்ளனர் என்று வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவத்தினர் பிரதேச சபைக்கு சொந்தமான கட்டடங்களில் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதன் காரணமாக இந்தக் காரியாலயங்கள் தனியார் வீடுகளில் அதிகளவு வாடகை கொடுத்து இயங்கி வரு கின்றமையும் இதனால் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## நல்மனம் படைத்தோர் உதவுக!



கிளிநொச்சியைச் சேர்ந்த உதைபந்தாட்டவீரர் அருந்த வராசா என்பவரின் மகள் சோபிகா என்னும் சிறுமி இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய நிலை யில் இருப்பதால் இதற்கான உதவிகளை நல்லமனம் படைத்தவர்களிடமிருந்து அருந்தவராசா எதிர்பார்க்கின்றார்.

ரூபா ஐம்பதாயிரத்தை இளையோர் செயற்பாட்டு நிறுவனம் சத்திரசிகிச்சைக்கான உதவு தொகையாக இதற்கு அளித்துள்ளது. ஏனையவர்களின் உதவிகளையும் வழங்கும்படி இளையோர் செயற்பாட்டு நிறுவனம் வேண்டி நிற்கின்றது.

## கழிவுப் பொருட்களுக்கு தீ மூட்டியதில் இனம் தெரியாத பொருள் வெடித்தது!
### கிளி. நகரில் இளம் பெண் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கழிவுப் பொருட்களுக்கு தீ மூட்டுகையில் அதற்குள் இருந்த இனந்தெரியாத பொருள் வெடித்த தில் யுவதி ஒருவர் படுகாயங்களுக் குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

மேற்படிச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கரு காமையில் இடம்பெற்றுள்ளது.

சூழல்பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மேற்படி பகுதியில் துப்புரவுப்பணிகளை மேற் கொண்டு கழிவுப் பொருட்களை ஒன்றாக்கி கழிவுப் பொருட்களுக்கு தீமூட்டிய பொழுதிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வன்னேரிக் குளத்தைச்சேர்ந்த அ. கனக தீபா(வயது-19) என்பவரே மேற்படி சம்பவத் தின் போது வலது கை பாதிப்புக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.சிறிலங்கா இராணுவத்தினர் சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்பின் மேற்படி பகுதியில் நிலை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட 40 சிறுவர்களின் விபரம் கையளிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தாமாக இணைந்த வயது குறைவான சிறுவர்கள் 40 பேர் அவர்களது பெற்றோரிடம் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்ட சிறுவர்களின் பெயர்ப் பட்டியல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நலவாழ்வு அமைப்பான யுனிசெவ் ஆகியவற்றின் நிர்வாகிகளிடம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை அளிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச சார்பற்ற இணையங்கள் மற்றும் ஐ.நா ஆகிய வற்றின் இணைப்பாளர் தியாகராஜா இப்பட்டியலை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இந்த அமைப்பின் பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

## கரையோரப் பகுதிகளில் மரநடுகைத்திட்டம் பூர்வாங்க நடவடிக்கைகள்

கரையோரப்பிரதேசங்களில் மரநடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான முன்னோடி கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக் தலைமையில் முள்ளி வாய்க்கால் மேற்கு தமிழ் மாறன் முன்பள்ளியில் கடந்த புதன் கிழமை இடம் பெற்றது.

தாளையடி தொடக்கம் கள்ளப்பாடு வரையான கரையோரப்பகுதிகளில் மேற் கொள்ளப் படவுள்ள மரநடுகைத்திட்டம் தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப் பாளர் கரிகாலன் கருத்துரை வழங்கினார். கரை யோரப்பகுதிகளில் மண்ணரிப்பை தடுப்பதற்காக இத்திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வொன்று கூடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர், கடற்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் , கமக்கார அமைப்பினர்,கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (19)

## அறிவியல் நகர் மக்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

கரைச்சிப்பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவை மூலம் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் காணிசம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வுகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.அந்த வகையில் எதிர்வரும் 11ஆம் திகதியன்று பொன்னகர் (அறிவியல் நகர்) மக்களுக்கான காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மலையாளபுரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து அன்றையதினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.அன்றையதினம் காணி சம்பந்தமான நடவடிக்கைளுக்கு வருகை தருபவர்கள் சகல ஆவணங்களுடனும் சமுகம் தரும் வண்ணம் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## இலுப்பைக்கடவையில் பல நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டல்

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டக்கிராமமான மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலுப்பைக்கடவை கிராமத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் "கார்ப்" திட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருக்கும் பலநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வியாழனன்று காலை 9.00 மணியளவில் இடம் பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் மலர்விழியின் தந்தையார் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திட்டப் பொறியியலாளர் தி.காண்டீபன் ஏற்றி வைக்க, தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் கல்நாட்டல் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் தி.சுதாகர் பிரதேச அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கவிப்பிரியா, தமிழர் புனர்வாழ்வுக்கழகப்பணிப்பாளர் அ.கேசவன் ஆகியோர் நாட்டிவைத்து கருத்துரைகளை வழங்கினர்.திட்டம் தொடர்பான விளக்கத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக சமுதாய மீள் கட்டுமானத் திட்டத்தின் இணைப்பாளர் அ.லோக நாதன் வழங்கினார்

## "திமிறி எழு திருப்பி அடி" உடையார்கட்டில் தெருவெளிஅரங்கு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பிரதேசத்தில் "திமிறி எழு திருப்பி அடி" தெருவெளி நாடக நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

விடுதலைப் பறவைகள் கலைஞர்கள் வழங்கும் புதுவை அன்பனின் இந்த தெருவெளி நாடகம் அன்று தொடக்கம் இன்று வரை பேச்சு வார்த்தை மூலம் எவ்வாறு சிங்களவர்களால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை சித்தரிப்பதுடன் இதற்கு தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை புலப் படுத்துவதாக அமைந்திருக்கின்றன.கடந்த புதன்கிழமை இரவு இந்நாடக நிகழ்வு குரவில் தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது. பெருமளவான மக்கள் இதனைக் பார்வையிட்டு வருகின்றனர். (19)

## சூழலைப் பாதுகாத்து சுபீட்சம் பெறுவோம்!

(அலுவலக செய்தியாளர்)

தேசத்தின் விடுதலைக்காக போராடிய படி சூழலைப் பேணுகின்ற பெருமைக்குரிய நாடாக எமது தாயகம் விளங்குகின்றது. இத்தகைய அரிய செயற்பாட்டிற்கு வழிகாட்டியாக சூழல் நல்லாட்சி ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளமை பசுமை என்றும் இனிமை என்றும் சிந்தனையை எல்லோர் மனங்களிலும் உருவாக்கியுள்ளது என கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி செயலணிக்குழு தெரிவித்துள்ளது.

இக்குழு இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது பல நாடுகள் தமது நாடுகளின் அபிவிருத்திக்குப் பின்னர் அவை சந்தித்த சூழலிய அபாயங்களே ஏராளம். இன்னும் பல்வேறு சாதனைகளைப் படைக்கும் நாடுகள் ஏராளம் சவால்களை சந்தித்து வருவது கண்கூடு. ஆனால் எமது தாயக அபிவிருத்தி ஏற்பாடுகளுக்கு முன்பாகவே சூழல் சீர்மயம் பற்றிய சிந்தனைகள் உருவாகி செயலளவில் அவை உருப்பெற்றுள்ளது. ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது என்பதுடன் ஒவ்வொரு மக்களின் பொறுப்பையும், கடமையையும் உணர்த்தி நிற்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை அது துரித அபிவிருத்தி பெற்று வருகின்றது. இதன்போது திறந்து விடப்பட்டுள்ள தாராள சந்தை வசதிகள் நாகரிகமயப்பட்ட நுகர்வு கோலங்கள், மேலைத்தேய பாவனைப் பொருட்களின் வருகை சூழலைப் பெரிதும் பாதிக்க வைத்துள்ளது என்பதுடன் எதிர்காலம் தொடர்பான அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது. பெருமளவு பிளாஸ்ரிக், பொலித்தீன் உட்பட்ட கழிவுகள் மூலைமுடுக்கு எங்கும் பரவியுள்ளன. இதன் எதிர்கால ஆபத்துக்களை நாம் சிந்திக்கவும், செயற்படவும் வேண்டியுள்ளது. திண்மக் கழிவுகளை முறையாக கழிவகற்றல் செய்யவும் சூழலுக்கு ஒவ்வாத பொருட்களை பொருத்தமான இடங்களில் இறுதி அகற்றுதலுக்காக சேமிக்கவும் நாம் ஒவ்வொருவரும் தினமும் செயற்பட வேண்டியுள்ளது.

எனவே 07.10.2005 தொடக்கம் சூழல் முன்னோடி வாரத்திற்கு வித்திட்ட சூழல் நல்லாட்சி ஆணையம் வழிகாட்ட ஒவ்வொரு மக்களும் பொறுப்புடனும் தாயக நேசிப்போடு பணிபுரிய சபதமெடுப்போம் பசுமை மிகுந்த இனிய தமிழ் தாயகத்தை எமது எதிர்கால சந்ததியிடம் கையளிப்போம் என கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி செயலணிக்குழுவினர் அறை கூவல் விடுத்துள்ளனர். (சோ)

## குடிநீருக்கு பெரும்தட்டுப்பாடு பொதுக்கிணற்றிலும் நீரில்லை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால் மக்கள் அவலப்படுகின்றனர்.

மேற்படி கிராமங்களில் உள்ள கிணறுகளில் நீர் இன்றி வரண்ட நிலையில் இருந்து வருகின்றன. இதனால் மக்கள் குடிநீர் பெறுவதற்கு அயல் கிராமங்களுக்கு அலைந்து திரிவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி கிராமத்தில் பொதுக்கிணறு இருந்தும் அதில் நீர் வற்றிய நிலையில் காணப்படுகிறது. நீர்வற்றிய நிலையில் காணப்படும் கிணற்றை இப்படத்தில் காண்கிறீர்கள். (24)



# கோப்பாய் 2ஆம் லெப். மாலதி தூபியில் நினைவு நிகழ்வுகள் நடாத்த ஏற்பாடு

**இந்திய இராணுவத்துடனான நேரடிமோதலின் போது களப்பலியான முதல் பெண் மாவீரரான இரண்டாம் லெப்டினனட் மாலதியின் பதினெட்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாளை கோப்பாய் கைதடிப் பாதையில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.**

மாலதி நினைவு நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினால் முன்னெடுக்கப் படவுள்ள இந்நிகழ் வுகள் காலை ஒன்பது மணிக்கு கோப்பாய் சந்தியில் இருந்து திருவுரு வப்படம் தாங்கிச் செல்வதுடன் ஆரம்பமாகவுள்ளன. சமூக சேவை கள் மன்றத் தலைவி திருமதி. நவநீ தம் ஜெகதீசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் திருமதி . பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

நிகழ்வில் பொது அமைப்புக்கள் தேசிய எழுச்சிப் பேரவையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வறிய கிராம மக்களின் மேம்பாட்டிற்கு உதவி

யாழ்.மாவட்டக்கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ். மாவட்டத் திலுள்ள பத்துக் கிராமங்களில் வட்டியில்லாக்கடன் திட்டம், சத்துணவுத்திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

குறித்த பத்து கிராமங்களிலும் அன்றாடம் உழைக்கும் வறிய கூலி மக்களுக்கே இவ்விரு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்டக்கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் இன்பம் தெரிவித்தார்.

பிரஸ்தாப கிராமங்களின் உழைக்கும் வறியமக்களை இனம் காணுவதற்கான ஆய்வு நடவடிக் கைகளை கிராமிய உழைப்பாளர் சங்கம் தற்போது மேற்கொண்டுவருவ தாகவும் அவர் தெரிவித்தார்.

திரட்டப்பட்ட ஆய்வுகளின் முடிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படு மெனவும் அவர் தெரிவித்தார். (37)

# யாழ்.நகரப் பகுதியில் சமீப நாட்களாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு!

(வலிகாமம்)

யாழ்.நகரப்பகுதியில் அண்மைக் காலங்களாக கொள்ளைச் சம்பவங் கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக் கின்றனர்.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளை, யாழ்- கலட்டிச் சந்திப்ப குதியில் இராமநாதன் வீதியிலுள்ள மேல்மாடி வீடொன்றில் கூரை பிரித்திறங்கிய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இதன்போது வீட்டிலிருந்த இரண்டு தாலிக் கொடிகள் உட்பட பெருமளவு நகைகளும், சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் புத்தாடைகள் எனப் பல இலட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் களவாடப்பட்டிருப்பதாக வீட்டார் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று யாழ். பெருமாள் கோவிலடியிலுள்ள வீடொன்றில், வீட்டிலிருந்தவர்களுக்கு மயக்க மருந்து வீசிறிவிட்டு அதிகாலை வேளை வீட்டு உடமைகள் யாவற்றையும் பாரஊர்தி ஒன்றில் ஏற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (37)

# சமூக நலனில் அக்கறையுடன் செயற்படும் இளைஞர்கள் மீது பொலிசார் கெடுபிடி!

## பொது மக்கள் கடும் விசனம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த காலங்களில் மக்களின் போராட்டங்களில் முன்னின்ற இளைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பேணும் குழுவில் அங்கம் வகித்த இளைஞர்கள் பலர் மீது சிறிலங்காப் பொலிசார் கைது மற்றும் கெடுபிடி நடவடிக்கைகளை கடந்த சில நாட்களாக தீவிரப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிசாரினால் அப்பாவி இளைஞர்கள் சிலர் கடந்த சில தினங்களாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருப்ப துடன் பல இளைஞர்களை பொலிசார் தேடி வருவதாகவும் மற்றும் இளைஞர்கள் சிலருடைய வீடுக ளுக்கு பொலிசார் தேடிச் செல்வ தாகவும் இதனால் பெற்றோர்கள் அச்சமடைந்து இருப்பதுடன் சிறிலங்காப் பொலிசாரின் இத்தகைய செயல்பாடுகள் பொது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை தோற்றுவித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# ஒக்ரோபர் "சேமிப்பு மாதமாக" மக்கள் வங்கியால் பிரகடனம்

(வலிகாமம்)

மக்கள் வங்கி இம்மாதத்தை சேமிப்பு மாதமாகப் பிரகடனப்படுத் தியிருப்பதாக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் து.ரகு தெரிவித்தார்.

ஒக்ரோபர்முதலாம் நாளிலிருந்து எதிர்வரும் 30 ஆம் நாள் வரையான ஒரு மாத காலத்தில் இலங்கை பூராகவுமுள்ள மக்கள் வங்கிக் கிளை களுடாகவும் "சேமிப்பு" குறித்த பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச மக்கள் வங்கிக் கிளைப்பகுதிகளிலுமிருந்து இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலமாகப் பாடசாலை களிலும், மக்கள் மத்தியிலும் பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதற்காக மாணவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட வுள்ளன என்றும் பிராந்திய முகாமையாளர் ரகு தெரிவித்தார்.

சேமிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலைகள், சனசமூக நிலையங் கள் , பொது இடங்களில் மக்கள் வங்கிக் கிளையினரால் விசேட சேமிப்புக் கருமபீடங்களும் நடாத்தப் பட்டு வருகின்றன. (37)

# உந்துருளி மதிலில் மோதியது இளைஞர் பரிதாப மரணம்

## - வேலணை துறையூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணைதுறையூரில் நடைபெற்ற உந்துருளி விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் நடைபெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் புங்குடுதீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த லோரன்ஸ்-ஜேசுரட்ணம் (வயது 25) என்பவரே உயிரிழந்த வராவார். பிரஸ்தாப நபர் உந்துருளியில் புங்குடுதீவுக்குப் பயணித்துக் கொண்டிருந்த சமயம் வேகக் கட்டுப் பாட்டை இழந்த உந்துருளி வீதியோர மதில் ஒன்றுடன் மோதியது. இதில் இவ் இளைஞன் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார்.

இவர் ஓட்டிச் சென்ற உந்து ருளியின் பின் இருக்கையில் அமர்ந்து பயணித்தவர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (33,28,27)

# படையினர் உதவியுடன் தேர்தல் சுவரொட்டிகள்!

தென்னிலங்கை இனவாதக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கியதேசியக்கட்சி ஆகியவற்றின் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் யாழ். குடாநாடு எங்கும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

ரணில் விக்கிரம சிங்க, மகிந்தராஜபக்ஷ ஆகியோரின் படங்களுடன் இச்சுவரொட்டிகள் யாழ். குடாநாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் காட்சியளிப்பதுடன் பொதுமக்களின் வீட்டுச்சுவரிலும் பொது இடங்களிலும் கோவில்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் சுவர்களிலும் எந்த வித அனுமதியு மின்றிப் படையினர் மற்றும் பொலி சாரின் உதவியுடன் ஒட்டப்பட்டுள்ள தாக பொதுமக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (28)

# சிகிச்சை பயனளிக்காது மாணவி மரணம்!

(தென்மராட்சி)

ஆஸ்துமா நோயினால் பாதிப்புற்ற யாழ். பல்கலைக்கழக மாணவி நேற்று முன்தினம் 10.45 மணியள வில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். கடுமையான சுகவீனம் முற்ற நிலையில் மருத்துவமனையில் அனும திக்கப்பட்ட சுன்னாகத்தை சேர்ந்த மாதவராஜா தனுஷா (வயது -21) என்ற மாணவியே சிகிச்சை பயனளிக்காமல் மரணமடைந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# தீயணைப்பு சேவை இடைநிறுத்தம்

மிக நீண்ட காலமாக யாழ். மாநகர சபையின் பாவனையிலிருந்த தீயணைப்பு இயந்திரம் திருத்தம் செய்யப்படவுள்ளதால் மறு அறிவித்தல் வரை தீயணைப்பு சேவை இடைநிறுத் தப்பட்டுள்ளது என யாழ் மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞா னம் அறிவித்துள்ளார்.

# மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் பலி!

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தின் ஈவினைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மின் விபத் தொன்றில் சிக்கி குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பாலசுந்தரம் செல்வராணி (வயது-65)என தெரிய வருகின்றது. காலை வேளையில் குளிப்பதற்காக சென்ற வேளை ஏற்பட்ட மின் ஒழுக்கினாலேயே இவர் உயிரிழந் துள்ளார். (27,33)

# தொண்டமானும் ஹக்கீமும் முன்பு செய்த தவறை மீண்டும் இழைத்துவிட்டனர்

## - அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா பொதுத்தேர்தலின் போது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் மேற்கொண்ட அதே தவறை இப்போது மீண்டும் செய்துள்ளன என்று அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்காவின் ஆளும் கட்சி வேட்பாளரின் தேர்தல் ஒருங் கிணைப்பாளரான மங்கள சமரவீர இது குறித்து கூறியுள்ளதாவது:

எனது அருமை நண்பர் ஆறுமுகம் தொண்டமான் அரசியல் தற்கொலை செய்து கொள்கிறார் என்று கூறியிருந்தேன். அதுதான் அவரது வாழ்க்கையாகிவிட்டது. சனாதிபதித் தேர்தலுக்குப் பின் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் அவர் வீசி எறியப்படுவார்.

பாராளுமன்றத்தில் இ.தொ.கா தனித்து செயற்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் மகிந்த ராஜபக்ஷ வைத்தான் ஆதரிக்கப் போகிறார்கள் என்று கூறினார்.

# தும்புக் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவி

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட தென்பகுதியில் தும்புக் கைத் தொழிலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கான உதவியை வழங்கியுள்ளதாக மாகாண கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தத் தும்பு உற்பத்திகளை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கொள்ளைச் சம்பவத்தில் தொடர்புடைய பிரதியமைச்சரை கைது செய்ய முயற்சி

(கொழும்பு)

பெண்ணொருவரைக் கடத்திச் சென்று 15 இலட்சம் ரூபா பணத் தைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர் பாக புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவரையும் அவரது நான்கு ஆதரவாளர்களையும் கைது செய்வதற்கான விசாரணை கள் நடைபெற்று வருவதாக வென்னப்புவ பொலிசார் தெரிவித்துள் ளனர். வென்னப்புவ தும்மல தெனியப் பகுதியில் இந்தக் கொள் ளைச் சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது. (32)

# வரலாற்றுப் பாட பேராசிரியரின் மோசடி கண்டுபிடிப்பு

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுப்பாட பேராசிரியர் ஒருவர் அரச நிதிக் கொள்கைகளுக்கு மாறாக இரண்டு வழிகளில் பெருந்தொகையை மாதாந்த ஊதியமாகப் பெற்றுவந்த சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

மேற்படி பல்கலைக்கழகத்தில் பேராசியராகப் பணிபுரியும் அவர் விடுமுறை நாட்களில் சிறிலங்காவின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலை தலைவர் பதவி பணியையும் ஏற்று கடமையாற்றிவருவது தெரியவந் துள்ளது. அவருக்கு அங்கு மாதச் சம்பளமாக 85 ஆயிரம் ரூபா வழங்கப்ப டுவதாக தெரிவிக்கும் அதே வேளை பேராசிரியர் பணிக்காக அவர் 59 ஆயிரம் ரூபாவையும் மாத வேதனமாகப் பெற்று வந்துள்ளார். இது சிறிலங்காவின் அரச நிதிச் சட்டத்துக்கு முரணானது எனக் கூறப்படுகிறது.

பந்துல கருணா திலக்க என்ற பேராசிரியரான இவர் சந்திரிகாவின் ஐக்கிய முன்னணி பதவி ஏற்றதும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவராக பதவியேற்றுள்ளார். எனினும் அதன்பின்பு பேராசிரியர் பதவியை இராஜினாமா செய்யாது சம்பளம் பெற்று வருவதுடன் அவருக்கு சொகுசு வாகனமும் அதற்கான இலவச எரிபொருட் செலவும் வழங்கப்பட்டு வருவதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரச ஊடகங்களின் பணிகளை கண்காணிக்க ஐ.தே.க.கோரல்

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்களுக்கு அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இவற்றுக்கு உரிய அதிகாரி ஒருவரை நியமித்து அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான வகையில் பிரச்சாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். சனாதிபதி வேட்பாளர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுவது குறித்து தொழில் ஆணையாளர் கவனம்செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

# வெற்றிலைச் சின்னத்திற்கான கூட்டு சனாதிபதித் தேர்தலிலும் நீடிக்கின்றது

சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு களத்தில் 13 வேட்பாளர்கள் போட்டியிடுவது இறுதியாகிவிட்டது. இதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் அல்லாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மகிந்தராஜபக்ஷ போட்டியிடுகிறார். அதாவது கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் ஜே.வி.பியுடனான உடன்பாடு ஏற்பட்டபின் கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய கட்சியின் சார்பில் அதன் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்தில் அவர் போட்டியிடுகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது வேட்பாளரை முன்னரே அறிவித்துவிட்டு இந்த வருடம் சனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் எனப் போராட்டம் நடத்தியது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார்? என்பது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

சனாதிபதி வேட்பாளராக மகிந்தராஜபக்ஷ அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட அவர் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டமையால் அவர் வேட்பாளராக நியமிக்கப் படாது போகலாம். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பார் என்றெல்லாம் பரபரப்பாகச் செய்திகள் வெளிவந்தன. இறுதியில் அவை எவையும் நடைபெறாது மகிந்தராஜபக்ஷவே வேட்பாளராக நியமிக்கப்பட்டுவிட்டார்.

இங்கு மகிந்தராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கைச் சின்னத்திலோ அல்லது பொதுசன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்திலேயோ போட்டியிடாது, ஜே.வி.பி-சு.க கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னத்தில் ( அதாவது வெற்றிலைச் சின்னத்தில்) போட்டியிடுவது கவனிக்கத்தக்கது அதாவது மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி சந்திரிகாவை முற்றாகப் புறக்கணித்து விட்டதை இது காட்டுவதாகக் கொள்ளலாம். அதாவது கடந்த ஜூலைமாதம் கைச்சாத்திடப்பட்ட பொதுகட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் முறிவடைந்த கூட்டணி மீண்டும் புதுப்பிக்கப் பட்டுவிட்டதானது. அதனையே காட்டுகிறது எனக் கொள்ளலாம்.




இதுவும் பிரச்சாரம்

ஜே.வி.பி-சு.க கூட்டணி கடந்த ஜூலையில் முறிவடைய பொதுக் கட்டமைப்பு வெளிப்படையான காரணமேயொழிய அது உண்மைக் காரணம்அல்ல. ஏனெனில் அக்கட்டமைப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற மனப்பூர்வமான எண்ணம் சனாதிபதி சந்திரிகாவுக்கு இருக்கவில்லை.

கூட்டமைப்பு ஆட்சி உருவாகிய நாள் முதல் இறுதிக்கணம்வரை தனக்குத் தொல்லை கொடுத்த. அவமானப்படுத்திய ஜே.விபி யிடம் பணிந்து போகத் தயாரில்லாத நிலையில் சர்வ தேசத்தின் நன்மதிப்பைப் பெறவும் அதே வேளை ஜே.வி.பியை ஒரு சிறந்த காரணத் தைக்காட்டி வெளியேற்றி விடவும் சந்திரிகா பொதுக்கட்டமைப்மைப் பயன்படுத்திக் கொண்டார்.

அதேவேளை ஜே.வி.பி அன்று இந்தக் கூட்டமைப்பிலிருந்து முற்று முழுதாக வெளியேறி இனி உறவே இல்லை என்று முடிவெடுத்துவிடவில்லை. அதாவது சு.கவின தலைமை மாற்றம் வரை அல்லது அதில் அதிகார மாற்றம் ஏற்படும் வரையேயான தற்காலிக ஏற்பாடாக ம.ஐ.சு. மு.விலிருந்து வெளியேறியது. பொதுக்கட்டமைப்பை சனாதிபதி கைவிட்டாலும் வெற்றி, கையொப்பமிட்டாலும் இலாபமே என்ற ரீதியிலேயே ஜே.வி.பியின் இந்த வெளியேற்றம் ஏற்பட்டது.

ம.ஐ.சு.மு.யில் அங்கம் வகிக்கும்வரை அதிலிருந்து வெளியேறிவிடப்போவதாக



இது பிரச்சாரம்

மிரட்டிவந்த ஜே.வி.பி அதிலிருந்து வெளியேறும் போது விரைவில் இணைந்து செயற்படும் காலம் வரும் எனக் கூறியது.

அதேபோல் ஜே.வி.பி வெளியேற விரும்பினால் வெளியேறலாம் என சனாதிபதி சந்திரிகா கூற ஜே.வி.பிவெளியேறும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத் திரி பாலசிறிசேன ஜே.வி.பி மீண்டும் தம்முடன் வந்து இணையக் கூடிய வகையிலேயே தமது செயற்பாடுகள் அமையும் எனக் கூறியிருந்தார்.

இவர்களின் இக்கூற்றுக்கள் பொது எதிரியாகிய ஐ.தேகட்சியை முறியடிக்க இரு தரப்புக்கும் ஒரு வரை விட்டால் வேறு கதியில்லை என்பது புலனாகிறது.

ஆனால் இவ்வாறு ஜே.வி.பியின் நிலையை நன்கு புரிந்திருந்தும் மகிந்தராஜபக்ஷ ஏன் ஜே.வி.பியின் 12 நிபந்தினைகளுக்கும் ஒப்புக்கொண்டார் என்பது குறித்து பல வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் ஒன்று தான் நேரடியாக இனவாதி என்றும் காட்டாமல் அதேவேளை ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் இனவாதிகளைத் திருப்திப்படுத்துதல் இரண்டாவது சனாதிபதி சந்திரிகா குமார துங்கவை நேரடியாக எதிர்க்காமல் அவரது ஆலோசனைகள் அல்லது அவரது விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட்டு அவரை மறைமுகமாக எதிர்த்தல்

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பிக்குமிடையேயான முரண்பாடானது. கௌரவப்பிரச்சினையே தவிர கொள்கைப் பிரச்சினையல்ல. எனவே சு.க வின் கொள்கைக்குமாறாக அல்லாது தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பது என்பதில் சிரமம் இராது.


தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து ஜே.வி.பி அலட்டிக் கொள்ளாது விடப்போவதாகவும் கூறிவிட்டது.

ஆனால் ஜாதிகஹெல உறுமய தன்னுடனான ஒப்பந்தச் சரத்துக்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெறும்வரை பிரச்சாரத்தில் ஈடுபடப் போவதில்லை. எனக் கூறுகிறது. ஆனால் ஜே.வி.பி யோ தனது பிரச்சார மேடையில் ஜாதிகஹெல உறுமய இடம் பெறக்கூடாது என்பதை இறுக்கமாகக் கடைப்பிடித்துவருகிறது. வேட்பு மனுத் தாக்கல் திகதியும் முடிவுற்ற நிலையில் ஜாதிக ஹெல உறுமயவை வழிக்குக் கொண்டு வருவது மகிந்த ராஜபக்ஷ வுக்கு சிரமம் மிக்கதாக இராது.

இப்பொழுது மகிந்தவுக்குப் பிரச் சினை சனாதிபதி சந்திரிகா குமார துங்கவும் பண்டார நாயக்க குடும் பத்தின் தீவிர ஆதரவாளர்களுமே. அவர்களும் இன்றைய சூழலில் ஒத்துழையாமை எனும் மென் போக்கான எதிர்ப்பை மட்டுமேகாட்டக் கூடிய நிலையில் உள்ளனர். தேர்தலில் தனது வெற்றிவாய்ப்பு வெளிப் படுமானால் அவர்களிலும் பலரைத் தம்வசம் இழுத்துவிடலாம் என மகிந்த ராஜபக்ஷ நம்புகிறார் போல் தெரிகிறது.

இதேவேளை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார நடவடிக்கைகளாயினும் சரி, தேர்தல் விஞ்ஞாபனமாயினும் சரி, பெரியமாற்றங்களைக் கொண்டதாக இல்லை. அதாவது 2001 டிசெம்பர் தேர்தலில் முன்வைக்கப்பட்ட- கடைப்பிடிக்கப் பட்ட அதே தந்திரோபாயங்களுடனேயே ஐ.தே.க. களத்தில் இருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். 5வருடங்களில்10 இலட்சம்வேலை வாய்ப்புகள் போன்ற வாக்குறுதிகளே மேலதிகமாக உள்ளன.

ஆனால் தான் சனாதிபதியாகத் தெரிவானால் தேசிய அரசாங்கமொன்றை அமைக்கப் போவ தாக ரணில் விக்கி ரமசிங்க வலி யுறுத்தி வருகிறார். அதிலும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியை இணைத் துக் கொண்டே அந்த அரசாங்கம் அமையும் எனக் கூறிவருகிறார்.



மனப்பத்திரம் தாக்கல்செய்தவுடன்.....

அவரின் இந்தக் கூற்று சனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு ஆசுவாசமளித்து அவரது தீவிர ஆதரவாளர் களை வசப்படுத்தும் முயற்சியாகப் பார்க்கப் படக்கூடியதாகும்.

எவ்வாறு தான் சமாதானம் கூறிக் கொண்டாலும் எதிர்காலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மகிந்த ராஜபக்ஷவுக்காகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டாலும் இவ்வளவு காலம் அவர் தாமதிப்பது மகிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னடைவான விடயமே. இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரின் பிரச்சாரமானது மந்தமான நிலையிலேயே இருக்கின்ற நிலையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பியே கைகொடுக்கிறது.

இவ்வாறான சூழ்நிலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள பண்டாரநாயக்க குடும்ப ஆதரவாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை ஜேவி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூட்டுச்சேர்ந்து சுமார் 16 மாதங்கள் நடத்திய ஆட்சி குறித்து மக்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக கூறப்படுகிறது. சுமார் 14மாத ஐ.தேக வின் ஆட்சியில் சாதாரண மக்களுக்கு ஏதும் கிட்டாமையே 2004 இல் அதன் தோல்விகளுக்குக்காரணம் எனக் கூறப்பட்டது. அத்துடன் அத்தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்க ஊழி'யர்களுக்கு பாரிய சம்பள உயர்வு, உர விலை குறைப்பு விலைவாசி குறைப்பு ,பட்டதாரிகள் வேலைவாய்ப்பு, உயர்தரம் கற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என பல வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் அவற்றில ஒரு சில மிக குறைந்த வீதத்திலேயே நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் எதுவித நிவாரணமுமின்றி இன்னமும் துன்பமுற்று வருகின்றனர்.

இதேவேளை மகிந்தராஜபக்ஷ எவ்வாறு ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய என்பன தம்முடன் இணைந்து கொண்டதால் தமது வெற்றி குறித்த உறுதிப்பாடாக இருக்கிறாரோ அதேபோல் இ.தொ.கா., மு.கா,ம.ம.மு, மேல்மாகாண மக்கள் முன்னணி என்பன தம்முடன் இணைந்து கொண்டமை குறித்து ரணில் விக்கிரம சிங்க மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்.

அவர் வடக்கு கிழக்கில் தமக்கு கிடைக்கப்போகும் வாக்குகளைத்தவிர்த்தால் கூட பத்து இலட்சம் அதிகப்படியான வாக்குகள் தமக்குக்கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இவ்வாறு இவ்விரு வேட்பாளர்களும் வெற்றி குறித்து நம்பிக்கையை வெளியிட்டு வந்தாலும் தேர்தல் களம் யாருக்கச்சாதகமானது என்பது குறித்து மதிப்பிடமுடியாத நிலையே காணப்படுகிறது.

தென் பகுதி ஆய்வாளர்கள் முன்னர் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளும் ஊகங்கள் கூட தெளிவற்ற குழம்பிய நிலையிலேயே உள்ளன. ஆனால் அவை தெளிவாக இருப்பினும் கூட சரியாக அமைந்து விடுமென சிறிலங்காவைப்பொறுத்து கூறிவிடமுடியாது

போர்நிறுத்தம் மூன்றரைவருடங்கள் நீடித்திருக்கின்றநிலையில் அதனால் மக்களின் மனநிலை எவ்வாறு மாறுபட்டிருக்கின்றது. என்பதைப்பொறுத்தே வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படலாம் என்பது ஒருபுறம், மறுபுறம் விலைவாசி ஏற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பன குறித்த விவகாரமே தென்னிலங்கையில் ஆட்சியைத்தீர்மானிப்பது வழமையாகும். நாட்டை விற்காமல் பொருளாதாரக்கொள்கை என்று ஜே.வி.பி.வலியுறுத்துகிறது. இது சிறிலங்கா இன்றுள்ள நிலையில் சாத்தியமா? அவ்வாறான கொள்கையை கடைப்பிடிக்கும் வல்லமையும் திடமும் மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டா?

**வேலவன்**

என்பதெல்லாம் இங்கு எழுகின்ற கேள்விகள் அல்லாவிடின் ஜே.வி.பி. உலகோடு ஒத்தோடத்தயார் நிலையில் இருக்கவேண்டும் இல்லாவிட்டால் மீண்டும் கூட்டமைப்பு தொடர்வது போல அந்த ஆட்சியில் குத்து வெட்டுகளும் தொடர்வதைத்தவிர்க்க முடியாது.

# 6.2 மில்லியன் பணியாளர்களுடன் உலக அஞ்சல் சேவை

## இன்று உலக அஞ்சல் தினம்

**உலக** வாழ் மக்களுக்கு மிக நெருங்கிய பங்களிப்பை தபால்சேவை செய்துவருகின்றது. இதனை மேலும் உறுதி செய்யும் வகையில் ஒவ்வொருவருடமும் ஒக்ரோபர் 9ஆம் திகதி "உலக தபால் தினம்" கொண்டாடப்படுகிறது. இலங்கை தபால்சேவை 130 வருடங்களுக்கு முன்பு முன்னோடியாக இருந்த உலக தபால் சங்கத்தின் மூலம் விரிவுபடுத்தப்பட்டது. எதிர்கால தபால்சேவையை விரிவுபடுத்தும் வகையிலே இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு இடத்திலும் தபால் சேவையின் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இது இன்று உலக நாடுகளில் நல்லதொரு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தபால் சேவை மக்களுடன் நேரடியாக சம்பந்தப் பட்டிருக்கிறது. இதனைப் பயன்படுத்தி அதனை விரிவுபடுத்த வேண்டும்.

வங்கி நடவடிக்கைகள், காப்புறுதி, பணம் சேகரிப்பு, பணம் வழங்கல், தகவல்தொழில் நுட்பத்துறை சேவை மற்றும் நடவடிக்கைத்திட்டங்கள் தபால் சேவையின் மூலம் மிக அவசிய தேவையாக சுலபமாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் தபால் சேவை தொடர்பாடல், செய்திப் பரிவர்த்தனை ஆகியவற்றின் ஆரம்பம், தோற்றம் பற்றிப் பார்ப் போம். உலகத்தில் உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து- தொடர்பாடலும் ஏதோ ஒரு வகையில் ஆரம்பித்துவிட்டது. ஆரம்பத்தில் கூட்டம் கூட்டமாக வாழ ஆரம்பித்த மனிதர்கள் இடம்பெயராமல் இருந்ததால் செய்திப் பரிமாற்றத்தை பற்றிச் சிந்திக்கவில்லை. கற்கால மனிதனுக்கு வேட்டையாடிப்பிழைப்பதில் வெறுப்பு ஏற்பட்டபோது புதிய தொழில்நாட்டம் உண்டாயிற்று. புலாலை மட்டும் உணவாக உண்ட மனிதன் காய் கனிகளை உண்ண ஆரம்பித்தபோது அவனுக்கு விவசாயம் செய்வதில் நாட்டம் ஏற்பட்டது. செழிப்பான நீர் வசதியுள்ள இடங்களைத் தேடிச் சென்று பயிர்செய்ய வேண்டியிருந்தது. இதனால் நீண்டகாலம் தொலைவிடத்தில் குடும்பத்தினரை பிரிந்திருக்கும் நிலை மனிதனுக்கு ஏற்பட்டது. அதனால் செய்திப் பரிவர்த்தனை அவசியமாகியது.



ஆரம்பத்தில் செய்திப் பரிவர்த்தனைக்கு மனிதன் புகையையே பயன்படுத்தினான். காலப்போக்கில் கூக்குரலிடுதல், தோல் கருவிகளின் மூலம் ஒலி எழுப்புதல், அம்பின் துணை கொண்டு செய்தி அனுப்புதல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தினான்.

மனித சமுதாயத்தில் கல்வி அபிவிருத்தி ஏற்பட, புதிய புதிய முறைகள் செய்திப் பரிவர்த்தனையில் கையாளப்பட்டன. பணபலம், அதிகாரபலம் படைத்தோர் அடிமைகள் மூலம் செய்திகளைப் பரிமாறினர். பழக்கப்பட்ட பிராணிகளும், பறவை களும், செய்திப் பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்பட்டன. கடல் கடந்த செய்திகளை அனுப்புவதற்கு புறாக்களைப் பயன் படுத்தினார்கள்.

கிறீஸ்து வருடம் 1500ஆம் ஆண்டளவில் கால்நடை செய்தித்தூதுவர்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டனர். இந்தச் சேவைக்கு வலிமை பொருந்திய முரட்டு மனிதர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். காடு, மலை, பள்ளத்தாக்குகள், ஆறுகள் ஆகியவற்றைத் தாண்டிச்சென்று செய்தி கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு இவர்களுக்கு இருந்தது. இந்தக் காலப்பகுதியில் அஞ்சல் பரிவர்த்தனை அரச குடும்ப மட்டத்திலும், பல்கலைக் கழக மட்டத்திலும் திருச்சபைகளின் மட்டத்திலும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அவர்களுக்கென்று தனியான தூதுவர்கள் இருந்தார்கள்.

பிற்காலத்தில் மனிதன் மூலம் செய்தியனுப்பும் முறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. செய்தி சென்றடையவேண்டிய தூரம் முழுவதற்கும் ஒரு மனிதனையே பயன்படுத்தாமல் பலமனிதர் கள் மூலம் இடத்திற்கிடம் செய்திகள் அனுப்பிவைக்கப்பட்டன. இந்த முறை மூலமே இன்று தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு இடத்திற்கிடம் தபால் பொதிகளைக்கொண்டுசெல்பவர்கள் தபாலோடிகள் (Postal runners) என அழைக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அஞ்சல் அதிபதிகளாக பதவி வகித்த கப்டன் ஏ.கென்னடி, அந்தோனிபேத்தாச்சி ஆகியோரால் நிர்வாக மட்டத்திலான செய்திப் பரிவர்த்தனைக்காக 1798ஆம் ஆண்டில் கொழும்பு, காலி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய ஐந்து நகரங்களில் காரியாலங்கள் திறக்கப்பட்டன. 1804ஆம் ஆண்டு தொடக்கம் 1817ஆம் ஆண்டுவரை அஞ்சல் அதிபதியாக இருந்த ஈ-பினாட்டமன் என்பவரே இந்த நாட்டின் முறை சார்ந்த அஞ்சல் சேவைகளின் அபிவிருத்திக்கு வித்திட்டவர் எனலாம். கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலிருந்த காரியாலயங்கள் 1815ஆம் ஆண்டில் இவரால் அஞ்சல் அலுவலகங்களாக மாற்றப்பட்டதுடன் மாத்தறையிலும் அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது. அவற்றை பொது மக்களும் பயன்படுத்த முடிந்தது.

1913ஆம் ஆண்டு தொடக்கம் 1923ஆம் ஆண்டுவரை அஞ்சல் அதிபதியாக பதவிவகித்த எவ்.ஜே.சிமித் என்பவர் 1921ஆம் ஆண்டில் திவுலகப்பிட்டியா, அக்மீமன, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாபத்துறை ஆகிய ஆறு இடங்களில் முதன் முதலாக உப அஞ்சல் அலுவலகங்களை நிறுவினார். இவ்வாறு காலத்துக்குக்காலம் அஞ்சல் சேவை வளர்ச்சி கண்டு வந்திருக்கிறது.

இலங்கை அஞ்சல் சேவை மக்களுக்கு வழங்கும் பாரம்பரிய சேவைகளுடன் காலத்துக்கு ஏற்ற நவீன சேவைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. ரெலிமெயில் சேவை, தபால் தொலைநகல் சேவை, தொலைநகல், காசுக்கட்டளைச் சேவை, விரைவு தபாற்சேவை, சர்வதேச மிக விரைவு தபால் சேவைகளைப் பொதுமக்கள் பெறமுடிகிறது. வாடிக்கையாளரின் நன்மை கருதி, அன்றாடத் தேவைகளை உணர்ந்து அஞ்சல் அலுவலகங்களில் தொடர்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அஞ்சல் சேவையுடன் தங்களுக்குத் தேவையான சேவைகளை யும் மக்கள் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட சேவைகளை, தேவைகளை மாநகர, நகரப் பகுதிகளிலுள்ள மக்கள் பெற்றுக்கொண்டாலும், இந்தச் சேவைகள் பட்டின கிராமப் புறங்களுக்கு இன்னமும் விஸ்தரிக்கப்படவில்லை. 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அஞ்சல் சேவை முற்றாகச் சீர்குலைந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன் ஒரு சாதாரண கடிதம் அஞ்சலில் இட்டு ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்குப் பின்னரே முகவரியாளர் கைக்கெட்டும் நிலை இருந்தது. கடந்த இருபது ஆண்டுகள் போர் அனர்த்தம் காரணமாக அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங் கள் அழிக்கப்பட்டதுடன் அலுவலக தளபாடங்கள், பொருட்களும் முற்றாக அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங் கள் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. அடிப்படை வசதிகளற்ற சிறிய கடைக்கட்டடங்களிலேயே அஞ்சல் அலுவலகங்கள் இயங்குகின்றன. அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்களில் கோலவுடைப் பணியாளர்கள் வெற்றிடங்கள் நிறையவே உண்டு. சுனாமி ஆழிப்பேரலை கடலனர்த்தம் காரணமாக அழிக்கப்பட்ட அஞ்சல், உபஅஞ்சல் அலுவலகக் கட்டடங்கள் இன்னமும் திருத்தி அமைக்கப்படாத நிலையில் வசதிகளற்ற சிறிய கட்டடங்களில் தளபாடங்கள் அற்றநிலையில் இயங்குகின்றன. மேற்குறிப்பிட்ட தேவைகள் பூரணமாகப் பூர்த்திசெய்யப்படும்போதுதான் உலக மக்களுடன் சேர்ந்து ஒக்ரோபர் 9 உலக அஞ்சல் தினத்தை வடக்கு-கிழக்கு மாகாணங் களிலுள்ள மக்களும் கொண்டாட முடியும். இது அரசினதும், அஞ்சல் திணைக்களத்தினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

இருநூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த, அஞ்சல் திணைக்களம் 580 அஞ்சல் அலுவலகங்கள், 3450 உப அஞ்சல் அலுவலகங்கள், 310 முகவர் அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றைக்கொண்ட பரந்த அஞ்சல் வலைப்பின்னலூடாக இலங்கை மக்களுக்கு அஞ்சல் சேவையை ஆற்றி வருகிறது. அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 22,000 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் உலக அஞ்சல் குடும்பத்தில் இணைந்து செயற்படும் 6.2மில்லியன் அஞ்சல் பணியாளர்களுடன் இணைந்து சிறந்த அஞ்சல் சேவையாற்ற வேண்டும். அதனையே உலகம் பூராகவும், உள்ள மக்களும் விரும்புகிறார்கள்.

**மா.நிர்மலாதேவி**

---

# திருமலை-மூதூர் கடல் வழிப் பயணம் எதிர் கொண்டுள்ள ஆபத்தை போக்குக!

### *பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் கோரல்*

(திருமலை)

திருகோணமலை-மூதூர் கடல் வழிப் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இயந்திரப் படகுகள் பழுதடைந்துள்ளதால் சேவை சீர்குலைந்துள்ளது. இதனால் பயணிகள் மீன்பிடிப்படகுகளில் ஆபத் தான நிலையில் பயணம் மேற்கொள் கின்றனர் என்று திருகோண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் துறைமுகங் கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அனுப்பிய அவசரக் கடித்தில் கோரியுள்ளார்.

திருமலை நகரில் அரச திணைக்களங்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன. மூதூரிலிருந்து அரச ஊழியர்கள் கடமைகளை நிறை வேற்றுவதற்காக திருமலைக்கு வரவேண்டியுள்ளது. அரச ஊழியர்கள் மாத்திரமல்ல திருமலை நகரப்பாட சாலைகளில் படிக்கும் மூதூர் மாண வர்களும் திருமலைக்கு தினமும் வந்து போகவேண்டியுள்ளது. திருமலை-மூதூர் கடல் வழி பயணி கள் படகுச் சேவை மூலம் இவர்கள் இருவழிப் பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளனர். இப்படகுச் சேவை சீர்குலைந்துள்ளதால் அரச ஊழியர் கள், மாணவர்கள் நோயாளிகள் பல இன்னலுக்குள்ளாகியுள்ளனர் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்துரைரெட்ண சிங்கம் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வீதி மார்க்கமாகப் பயணம் செய்வதென்றால் அல்லை- கந்தளாய் வீதியால் 70 கிலோ மீற்றர் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். மழைகாலத்தில் வீதிப்பயணம் மேற் கொள்ள முடியாது. எனவே பழுத டைந்துள்ள பயணிகள் இயந்திரப் படகு களை திருத்தி விரைவில் சேவைக்கு விடவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அமைச்சரைக் கேட்டுள்ளார். (25)

## கணினிப்பயிற்சி ஆரம்பம்

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி வலயக்கல்விப் பணி மனையின் முறைசாராக்கல்விப் பிரிவில் நடைபெற்ற கணினிப்பயிற்சி நேர்முகத் தேர்விற்கு தோற்றிய அனைவரும் நாளை திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு சமுகம் தரு மாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# கிழக்கின் பாதுகாப்பைப் பலப்படுத்த பிரதமர் மகிந்த அவசர பணிப்புரை!

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப் பைப் பலப்படுத்தி அந்தப்பிரதேசங் களில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடியாக நட வடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா பாதுகாப் பமைச்சின் செயலாளருக் கும், பொலிஸ் மா அதிபருக்கும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள் ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலை மையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் அமைச்சர் நஜீப் எம் மஜீட், அன்வர் இஸ்மைல், உசைன் பைலா, பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சி, பாதுகாப்பமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் அடிக்கடி முகம் கொடுக்கும் இன்னல்கள் குறித்தும், தற்போது அங்கு நிலவும் பதற்றகர மான சூழ்நிலை குறித்தும், இனபேதமின்றி வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்துள்ள மகிந்த ராஜபக்ஷ இதனுடன் தொடர்புடையவர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

குறிப்பாக எதிர்வரும் தேர்தல் காலப்பகுதியில் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் சுயாதீனமாக இயங் கக் கூடிய வகையிலான சூழ் நிலையை ஏற்படுத்துமாறும் மகிந்தராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சியில் அரச அதிபருக்கான சுற்றுலா விடுதி அமைத்தலுக்கான கேள்வி கோரல்

மேற்குறித்த வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் 2005.09.05ஆம் திகதிய நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளவாறு அதில் குறித்த நிபந்தனைகளுடன் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு நாள் 2005.10.20ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபரும், கேள்விச் சபைத்தலைவரும்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-13017)

# வாகன விபத்து மூவர் காயம்!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த வான் ஒன்று புத்தளம் பாலாவிப் பகுதியில் ரயிலுடன் மோதியதில் மூன்றுபேர் காயம் அடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 12.15மணி அளவில் இடம்பெற்றது. ரயில் கடவை மூடப்பட்டு இருந்தவேளை வான்சாரதி கடவையை தவறான வழியில் கடக்க முற்பட்ட வேளை இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# எங்கள் குட்டிக் குமரனிற்கு
## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**எங்கள் வானத்து வளர்நிலவே.**
**வாழ்வின் நலங்களொடு**
**வல்லமையும் நீ பெற்று**
**வளமோடு வாழ்கவென**
**வாழ்த்துகிறோம் இந்நாளில்**

**என்றும் உனை வாழ்த்தும்**
**அப்பா, அம்மா,**
**உடன்பிறப்புக்கள், உறவுகள்.**

(6803)

# நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை.
## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் (TAARP)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.**
**“ஆஅவ” கடன் இல 0006 SRI (SF).**

# கேள்வி கோரல் - இல. 01

**நிகொட் - முல்லைத்தீவு**

***முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்கள அலுவலகமும், விடுதியும் நிர்மாணம்***

*மேற்படி வேலைக்குரிய ஒப்பந்த ஆவணங்கள் வழங்கும் திகதி 2005.10.14ஆம் திகதி பி.ப.3.00 மணிவரையும் கேள்வி சமர்ப்பிக்கும் திகதி 2005.10.21ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றேன். ஏனைய விபரங்கள் முன்னைய விளம்பரத்தில் குறிப்பிட்டவாறே இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.*

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரச அதிபர், முல்லைத்தீவு.**

(சி-13012)

# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு கீழ் காட்டப்படும் அளவுகளில் கிடுகு வழங்குவதற்கு இம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் இருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| பிரதேச செயலகம் | வழங்க வேண்டிய கிடுகின் அளவு (சோடி) |
|---|---|
| கரைதுறைப்பற்று | 46,600 |
| புதுக்குடியிருப்பு | 49,800 |
| துணுக்காய் | 35,000 |
| மாந்தை கிழக்கு | 13,800 |
| மொத்தம் | 145,200 |

கேள்விதாரர் ஒரு சோடி கிடுகின் போக்குவரத்து செலவு உட்பட எவ்வளவு ரூபா என கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்டு 12.10.2005இற்குமுன் தலைவர் கேள்விச்சபை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எனும் முகவரியிட்டு அனுப்பி வைக்கவும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விப் பெட்டி திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

இதற்கான மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2005.10.12ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்..

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபரும்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-13014)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2005

**கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும் ஒப்பந்தவேலைசெய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடம் இருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.05.10.2005 ஆம் திகதி தொடக்கம் 12.10.2005 ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.**

**கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 12.10.2005. ஆம் திகதி அன்று பிற்பகல் 1.00 மணிவரை சேர்க்கப்படலாம் அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்வியை ஏற்கவோ நிராகரிக்கவோ, கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்வி காரர் சமுகமளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பு,ர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியை “ செயலாளர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு” என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை “பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு என்ற முகவரிக்கும் அதே நாளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காகித உறையின் மேல் மூலையில் வேலையின் பெயரை எழுதி கேள்விப்பத்திரம் 2005 எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் மேலதிக விபரங்களை பிரதேச சபையில் அறிந்து கொள்ளலாம்.**

| இல | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப் படக் கூடியது. | கேள்விப்பத்திரப் பணம் மீளளிக் கப்டாதது | வற்வரி பற்றி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம் |
|---|---|---|---|---|
| 01 | கரைச்சிக்குடியிருப்பு பிரதான வீதி. | 500\= | 29000\= | |
| 02 | கரைச்சிக்குடியிருப்பு பாடசாலை வீதி. | 500\= | 10000\= | |
| 03 | கரைச்சிக்குடியிருப்பு கோவில் வீதி. | 500\= | 9000\= | |
| 04 | உண்ணாப்புலவு பழைய காணிப்பதிவக வீதி. | 500\= | 22000\= | |
| 05 | கரைச்சிக்குடியிருப்பு வைத்தியசாலை அருகாமை வீதி. | 500\= | 18200\= | |
| 06 | சிதம்பரப்பிள்ளை வளவு வீதி. | 500\= | 20000\= | |
| 07 | வலையன்மடம் விளாத்தி வெட்டுவான் வீதி. | 500\= | 40000\= | |

**(இ.கிருஷ்ணபிள்ளை)**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு.**

(சி-13052)

# இலங்கை - ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனம்
## கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கான
# அறிவித்தல்

**ஜேர்மன் சமஷ்டி குடியரசின் ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைச்சின் கீழ் செயற்படும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (GTZ) இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகிறது.**

**GTZ இலங்கை அரசாங்கத்தின் பங்காளியாக அதன் அபிவிருத்தி நோக்கங்களுக்கு ஆதரவாக அமைச்சு சார்ந்த அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப உதவிகளும், ஆக்கபு,ர்வமான மனிதாபிமான பொருளாதார தீர்வுகளையும் வழங்கி வருகிறது.**

**GTZ வடபுனரமைப்புத்திட்ட நிர்வாகம் சுனாமி அனர்த்தத்தினால் அழிவடைந்த பல பாடசாலைகளை புதிய நிலையங்களில் நிர்மாணிப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது.**

**இதன் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்படுகிறது.**

- **மணற்காடு** — **றோ.க.த.க. பாடசாலை**
- **செம்பியன்பற்று** — **றோ.க.த.க.பாடசாலை**
- **வெற்றிலைக்கேணி** — **பரமேஸ்வரா வித்தியாலயம்**

**இப்பாடசாலை நிர்மாணப் பணிகளை உரிய கால எல்லைகட்குள்ளும், உயர் தொழில்நுட்பத் திறனுடனும் நிறைவேற்றித்தரக்கூடிய அங்கிகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தங்கள் முழுமையான விபரங்களை 18.10.2005 திகதி பிற்பகல் ஐந்து மணிக்கு முன்னர் GTZ வடபுனரமைப்புத் திட்ட அலுவலகத்தின் இல 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் அல்லது இல 29/15 விசாக்கா வீதி, கொழும்பு -4 என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**ஒப்பந்த காரர்களை அவர்களது அனுபவம்,திறன்,வளம் ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யும் உரிமையை GTZ வடபுனரமைப்புத்திட்ட நிர்வாகம் தன்னகத்தே கொண்டுள்ளது.**

**அப்படி தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர்களுக்கு கட்டட ஒப்பந்தங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்..**

**சிரேஷ்ட ஆலோசகர்**
**472, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-13008)

# FORUT Campaign for Development & Solidarity

## AN ORGANISATION PROMOTING ALCOHOL, DRUG, AND SMOKE FREE ENVIRONMENT

### VACANCY Announcement

**FORUT**, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Position | Minimum Requirements | Tasks |
|---|---|---|
| **Field Coordinator** | • Graduate in sociology or eqt & 2 years experience in social mobilisation OR GCE(A/L) with 3 years NGO work in social mobilisation OR GCE(O/L) with 5 years NGO work in social mobilisation AND·<br>• Excellent proven computer skills (Ms Office) is desirable·<br>• Spoken and written skill in English language is desirable·<br>• Valid mo-bike riding license·<br>• Age 23-35 years | • Social mobilisation: Facilitate the target group to achieve increased participation·<br>• Capacity build CBOs /Partners to maintain proper accounts and minimum office documents·<br>• Work with identified vulnerable people to provide appropriate support·<br>• Conduct regular follow-up prog rammes to ensure sustainable results·<br>• Ability to work on gender related issues·<br>• Monitor & Analyze progress monthly·<br>• Maintain base line data and analyze impact |

Females are encouraged to apply. Duration of contract will be one year with possible extensions. Only short listed candidates will be called for interview. The application should reach FORUT by 20.10.2005 by e-mail : arne@forut.lk, or regular mail: FORUT Vanni, 155th mile post, Jaffna-Kandy Road, Kilinochchi.

(சி-12947)

# IMMEDIATE VACANCY Solidar

AN INGO consortium induding NPA,SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 Europeam countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri lanka comprises of three international NGO s- Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and swiss Labour Assistance (SAH).

We are currently at the planning stage for the phase 3 Tsunami Shelter constuction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in kilinochchi | Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. please send in your applications to reach us on or before 11th October 2005.

**position:Head of Administration**
At least 2years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems.Good command of written and spoken English would be essential. Working Knowledge on Word, Excel, PowerPoint and access is a requirement.

**position: administrative Officer**
Provide administrative support to the Head of Administration. Duties will include maint of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

**position: Accountant**
Excellent knowledge in maintaining company accounts with at least 3-5 years experience. Must be able to work in MS Excel and MS Access. Fluency in written and spoken English is a must.

**position: Translators (2 positions)**
Should be capable of both verbal and written translations from Tamil to English and vis versa. Ability to translate Sinhalese into English will be an added qualification.

**position: Telephone Operator cum receptionist**
Experience in handling a PABX system would be an advantage though not essential.Good command of spoken English is a must

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH

(சி-13007)

# அரசியல்வாதிகள் -தரகர்கள் உறவினை முறிக்கவேண்டும் -சோனியா

அரசியல்வாதிகள் - இடைத்தரகர்கள் உறவை முறிக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலங்களில் இருந்து என்ன குரல் வெளிப்படுகிறது என்பதை நாடே கவனித்துக்கொண்டு இருக்கிறது. ஆட்சியில் நேர்மை தூய்மை அவசியம். அரசியல்வாதிகள் அதிகாரிகளுடன் திருட்டுத்தனமான உறவை இடைத்தரகர்கள் பராமரித்து வருகின்றனர். அதன் மூலம் வளர்ச்சி திட்டங்களை இறுக்கி விட்டனர். இந்த உறவை தகர்த்தெறிய வேண்டும் என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மேலும் குறிப்பிட்டார்.

# MEDICINE IN RUSSIA

**SMOLENSK STATE MEDICAL ACADEMY**
**DOCTOR OF MEDICINE (MD)**
MAIN SUBJECTS IN ENGLISH
*Internationally Recognized, Including British.*
*Srilanka Medical Council and W.H.O*
*2000 US $ Per annum (6 Years)*

குறைந்த கட்டணத்தில் கற்பதற்கும், A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கும் அரிய சந்தர்ப்பம்

**Admission,** மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர்கள் மூலம்நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்

**T. THULASY** **0785263960**
SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE

NO.33,Rudra Mawatha,
Wellawtta

672 K.K.S ROAD
Nachchimarkovillady
Jaffna 021-2222536.

## தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு

குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி

(சி.12898)

**கிளி/ ஆதவன் முன்பள்ளி கிளிநொச்சி**

## 10ஆம் ஆண்டு வருடாந்த சிறுவர்கலை விழா

இடம் :- கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்
காலம் :- 09.10.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 1.30 மணி

தலைவர்
**திரு.சி.மகேந்திரன்**
(நிர்வாகி ஆதவன் கல்வி நிலையம்)
பிரதம விருந்தினர்
**திரு.சோ. தங்கன் அவர்கள்**
(துணைப்பொறுப்பாளர்- அரசியல்துறை தமிழீழம்)
சிறப்பு விருந்தினர்கள்
**திரு.த.சத்தியமூர்த்தி அவர்கள்**
(பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)
**திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள்**
(உதவிக்கல்விப்பணிப்பாளர்)
**திரு. க. தணிகைமாறன் அவர்கள்**
(பொறுப்பாளர் - தமிழீழ நுண்கலைக்கல்லூரி)
**திரு.செ. பாண்டியன் அவர்கள்**
(பணிப்பாளர் ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திப்பிரிவு த.பு.கழகம்)
**திரு.சு. பசுபதிப்பிள்ளை அவர்கள்**
(செயலாளர் - தேசிய எழுச்சிப்பேரவை)
தங்களை அன்புடன் அழைப்பதில் மகிழ்வடைகின்றோம்..

**நிர்வாகி, பெற்றோர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள்**

(6826)

## கட்டடப் பணியாட்களிற்கான வெற்றிடம்

கிளிநொச்சி பூநகரியில் அமைக்கப்படவுள்ள யாழ். பல்கலைக் கழக விவசாய பீட கட்டட நிர்மாணப் பணிக்கு கீழ்க் குறிப்பிடும் பணியாட்கள் உடனடியாக தேவைப் படுகின்றனர்.

1). கட்டடப் பொறியியலாளர் (Site Engneears).
2). தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் (Technical Officers).
3). கட்டட மேற்பார்வையாளர்(Building Supoisier).
4). களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keepers).
5). காவல்த் தொழிலாளர் (Watchers).

உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**பணிப்பாளர்.**
**வி.வி. இராமநாதன்**
**அன்கொம்பனி பிறைவற் லிமிற்ரெட்.**
**வைத்தியசாலை சுற்றுவட்டவீதி.**
**வவுனியா**
தொ.பே.இல
024-22 21229

(சி-13006)

# இந்திய அணியில் விரிசல் இல்லை சமாளிக்கிறார் சச்சின் டெண்டுல்கர்




"இந்திய அணியில் விரிசல் எதுவும் இல்லை. வீரர்களும் பயிற்சியாளர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். குடும்பத்தில் ஏற்படுவதைப் போல அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். அதை வைத்து அணியில் ஒற்றுமை இல்லை என்று கூற முடியாது" என்கிறார் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர்.

சமீபத்தில் பயிற்சியாளர் கிரேக் சப்பல்-தலைவர் கங்குலிக்கும் இடையே பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதற்கு ஒருவழியாக ஆறு பேர் கொண்ட விசாரணைக்குழு தீர்வு கண்டது. இது தொடர்பாக யாரும் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கக் கூடாது என்றார் சபைத் தலைவர் மகேந்திரா. இதை கங்குலி உட்படயாரும் கண்டு கொள்ளவில்லை. இந்தச்சூழலில் நேற்றுமுன்தினம் சச்சினும் அணியின் ஒற்றுமை பற்றிப் பேசினார். மும்பையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த இவர், அணியின் ஒரே இலக்கு வெற்றி தான் என்றார். மேலும் பல விடயங்கள் குறித்து சச்சின் அளித்த பேட்டியில்,

காயத்துக்கு (டென்னிஸ் எல்போ) சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின் கிட்டத்தட்ட குணமடைந்து விட்டேன். வலைபயிற்சி செய்யும் போது பிரச்சினை எதுவும் இல்லை. மருத்துவர்களும் கவலைப்படத்தேவையில்லை என்று கூறி விட்டனர். கொஞ்சம் வலி இருக்கிறது. இது துடுப்பாட்டம் செய்வதற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றார்.

# லெப்.கேணல் நிரோஜன் ஞாபகார்த்த மென்பந்து இறுதிப் போட்டி



லெப்.கேணல் நிரோஜன் ஞாபகார்த்தமாக உடையர்கட்டு நிரோஜன்விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் கடற்புயல் அணியும் விசுவமடு தோழர்கள் அணியும் மோதின. நேற்று இச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி, இறுதிப்போட்டிகள் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் விசுவமடு தோழர்கள் அணி உடையார்கட்டு நண்பர்கள் அணியையும், கடற்புயல் அணி சுதந்திரபுரம் கலைவாணி அணியையும் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

# கரைச்சிப் பிரதேச கழகங்கள் மோதும் கால்பந்து போட்டி நாளை ஆரம்பம்


கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திசபை நடாத்தும் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான லீக் முறையிலான கால்பந்துப் போட்டி நாளை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மருதநகர் சந்திரன் விளையாட்டு மைதானத்தில் நாளை மாலை போட்டி ஆரம்பமாகும். முதல்நாள் ஆட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து பிரைக்சன் அணியும் உதயதாரகை அணியை எதிர்த்து திருநகர் அணியும் மோதவுள்ளன.



இந்தியா - பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற மூன்று ஒரு நாள் போட்டித் தொடரை 3-0 என்ற நிலையில் முழுமையாக கைப்பற்றிய இந்திய கிரிக்கெட் அணி வெற்றிக் கிண்ணத்துடன்...

# சச்சினைத் தொடர்ந்து கங்குலிக்கும் டென்னிஸ் எல்போ



சச்சினைத் தொடர்ந்து சௌரவ் கங்குலிக்கும் முழங்கை காயம் ஆரம்பித்து விட்டது. இதன் காரணமாக கங்குலி சலஞ்சர் தொடரில் பங்கேற்கவில்லை. இவருக்குப் பதிலாக சீனியர் அணிக்குத் தலைவராக முகமது கைப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இடதுமுழங்கைகாயம் (டென்னிஸ் எல்போ) காரணமாக சச்சின் டெண்டுல்கர் கடந்த நான்கு மாதங்களாக எந்தப் போட்டியிலும் பங்கேற்கவில்லை இதிலிருந்து தற்போது குணமடைந்துள்ள இவர் சலஞ்சர் தொடரில் முதல் முறையாக களமிறங்குகிறார். ஆனால் இவர் களத்தில் காலடியெடுத்து வைக்க, கங்குலி இதே 'எல்போ'காயம் காரணமாக வெளியேறுகிறார். சமீபத்தில் நடந்த சிம்பாப்வே தொடரின் போது முதல் முறையாக கங்குலிக்கு வலது முழங்கையில் வலி எடுத்துள்ளது.

கொல்கத்தா திரும்பியதும் இதற்காக பிரபல எலும்பு முறிவு மருத்துவர் கல்யாண் முகர்ஜியிடம் எம். ஆர்.ஐ, எடுத்துள்ளார். இந்த அறிக்கையை பார்த்த கிரிக்கெட் அணியின் பிஸியோதெரபிஸ்ட் ஜான் குளோஸ்டர், மருத்துவர் ஆனந்த் ஜோஷி, கங்குலிக்கு லேசான டென்னிஸ் எல்போ, காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்ட போட்டி



விசுவமடு வர்த்தகசங்கம் நடாத்தும் லீக் முறையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமான மேற்படி சுற்றுப் போட்டியில் நேற்று மட்டும் மொத்தம் நான்கு போட்டிகள் நடைபெற்றன.

முதலாவது போட்டியில் சுப்பர் ஸ்டார்-சோலை அணிகள் மோதின. இதில்சோலை அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் பாரதி ஏ-தூயதமிழ் அணிகள் மோதின. இதில் தூயதமிழ் அணி வெற்றிபெற்றது. மூன்றாவது போட்டியில் சோலை பி.இளந்தாரகை பி அணிகள் மோதின இதில் சோலை அணி இளந்தாரகை பி அணியிடம் தோல்வி அடைந்தது.

நான்காவதாக நடைபெற்ற பாரதி பி.அணிக்கும் நண்பர்கள் அணிக்கும் இடையிலான போட்டியில் நண்பர்கள் அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து இன்னும் பல லீக் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மேற்படிப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சுபானந், குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

# செயலகங்களுக்கிடையிலான கால்பந்து இறுதிப்போட்டி கரைதுறைப்பற்று கால்பந்து அணி சம்பியன்

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தை எதிர்த்து விளையாடிய கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலக அணியினர் 5-4 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது, மேற்படி போட்டி கடந்த ஏழாம்திகதி வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. இதற்கு முன்னர் இப்போட்டி புதுக்குடியிருப்பில் நடைபெற்றபோது போதிய வெளிச்சமின்மையால் இடை நிறுத்தப்பட்டிருந்தது.




# சைமன்ஜோன்ஸ் காயம் பாக்.தொடரில் இடம்பெறமாட்டார்



பாகிஸ்தானுடனான சுற்றுத் தொடரில் இங்கிலாந்து பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ் இடம்பெறாதது பெரும் சிக்கலை ஏற்படுத்தும்எனத் தெரிவிக்கப்படுகிறது. இவருக்குப் பதிலாக கிரிஸ்ட்ரம்லெட் நியமிக்கவிருந்தநிலையில் அவரும் காயத்துக்குள்ளாகியிருக்கிறார்.

ஏற்கனவே காயமடைந்த ஜோன்சுக்கு பதிலாக ட்ரம் லெட் அல்லது அண்டர் சன்னை நியமிப்பது என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தற்போது அண்டர்சன் நியமிக்கப்படலாம் என்று உறுதியாகியுள்ளது. அண்டர் சன் கடந்த தென்னாபிரிக்காவுடனான போட்டியில் பிரகாசிக்கத்தவறிய போதிலும் அண்மையில் நடைபெற்ற கவுண்டி போட்டிகளில் சிறப்பாக ஆடி அனுபவம் பெற்றுள்ளார் என பயிற்சியாளர் ரொய் கூலி தெரிவித்துள்ளார்.


சீனாவில் உள்ள பகு நகரில் உலக ஜிம்னாஸ்க் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஸ்பெயினின் வீராங்கனை சாகசம் செய்த காட்சி.



# கரித்தாஸ்-கியூடெக் அனுசரணையில் ஊக்குவிப்பு விளையாட்டு விழா

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசங்களான பூநகரி, வட்டக்கச்சி, அக்கராயன், ,கிளிநொச்சி ஆகிய இடங்களில் அவ்வப் பிரதேசக் கிராமங்களின் கரித்தாஸ்- கியூடெக் ஊக்குவிப்பு மாதர் குழுவினருக்கும், சிறுவர் குழுக்களுக்கும், கரித்தாஸ்- கியூடெக் குழுக்களின் ஊக்குவிப்பு இணைப்பாளர்கள், ஊக்குவிப்பாளர்களால் சென்ற மாதம் பிரதேச ரீதியில் விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப்பட்டன.இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான மாவட்டப் போட்டி நேற்று கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு தமிழீழ விளையாட்டுத் துறை அலுவலர்கள் நெறியாளர்களாகப் பணியாற்றினர்.இப் போட்டிகளில் எல்லோர் ஆர்வத்தையும் ஈர்த்த போட்டியாக மாதருக்கான கயிறிழுத்தல் போட்டிஅமைந்தது.





### சிந்தனைக்கு

சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச்சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 09.10 .2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## இறைமையின் பெயரில்

சிறிலங்கா அரசு சிறுபான்மையினரான தமிழ்மக்களின் உரிமைகள் அதிகாரங்கள் என்பனவற்றை பகிர்ந்தளிக்க ஒரு பொழுதும் தயாராக இருந்ததில்லை. தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஏதோ ஒருவகையில் அதாவது தனித்தோ அன்றி சர்வதேச நாடுகளின் உதவியுடனோ இராணுவ ரீதியில் தோற்கடிக்கவே முற்பட்டு வந்துள்ளது. வருகிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் காலத்திலும் சரி சர்வதேச ரீதியாக சிறிலங்கா அரசு ஒரே நிலைப்பாட்டுடனேயே செயற்பட்டு வந்தது/ வருகின்றது. குறிப்பாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரச்சாரம்; உலக நாடுகளின் ஆதரவைப்பெறுவது;இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவைத்திரட்டுவது என்பதே அரசின் வெளியுறவுக்கொள்கையாக இருந்துள்ளது.

இதன் அண்மைய வெளிப்பாடே ஐரோப்பிய ஒன்றியநாடுகள் இடையில் சிறிலங்கா அரசு மேற்கொண்டதீவிரபிரச்சாரமும், அதன் விளைவாக விடுதலைப்புலிகள் ஐரோப்பிய ஒன்றியநாடு களுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்பட்டதடையுமாகும். இது ஒரு வகையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகள் மீது தடைவிதிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முழு அளவில் வெற்றி அளிக்காத நிலையில் இப்பயணத்தடையுடன் மட்டும் தற்பொழுது இவ்விவகாரம் முடிவிற்கு வந்துள்ளது.

இந்நிலையில் தற்பொழுது ஐக்கியநாடுகள் சபை மூலமாக விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதற்கு சிறிலங்கா அரசு பாரிய முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது ஐ.நா. வினால் கொண்டுவரப்படும் தடைமூலமே விடுதலைப்புலிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரலாம்என்பது சிறிலங்கா அரசு உலகிற்கு அளிக்கும் விளக்கமாகும்.

ஆனால் அடிப்படையில் விடுதலைப்புலிகளை பலமிழக்கச்செய்தல் என்பது இராணுவ ரீதியில் தோற்றகடித்தல் என்பதே ஆகும். அதாவது, விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன் மூலம் தமிழ்மக்களின் போராட்டத்தை தோற்றடித்தல் என்பதும் இதன்பின்னர் இலங்கையில் இனப்பிரச்சினை என்பது இல்லை என்பதுமே அவர்களின் நிலைப்பாடாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களின் உணர்வு - தீர்மானம் என்பன இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்பது அவசியமற்றது என்பதாகும். இதன்பிரகாரம் சமாதான முயற்சிகள், அரசியல்தீர்வு என்பன அவசியமற்றவை. ஆகையினால் தமிழர் தரப்புடன் எத்தகைய சமரசமும் செய்துகொள்வது என்பது தேவையற்றது என்பதே சிறிலங்கா அரசின் நிலைப்பாடாகும்.

இதனால் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பது குறித்து சிந்திப்பதற்கு சிறிலங்கா அரசு தயாராக இல்லை. இவ்விடயத்தில் சர்வதேச நாடுகள் கொண்டுள்ள அக்கறை -கரிசனை என்பன குறித்தும் சிறிலங்கா அரசு அலட்டிக்கொள்வதில்லை.இதேவேளை இறைமையுள்ள அரசு என்ற நிலையில் சர்வதேசம் குறித்து இரண்டுவகையிலான அணுகு முறைகளை அது கையாண்டு வருகின்றது.

ஒரு புறத்தில் இறைமையுள்ள அரசு என்ற ரீதியில் உலக நாடுகளில் இருந்து பொருளாதார இராணுவ உதவிகளைப்பெற்று யுத்தத்தை நடத்துகின்றது. இதற்கு நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்ற ரீதியில் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றது. அத்தோடு சனநாயகத்தைப் பாதுகாக்கப் போரிடுவதாகவும் கூறிக்கொள்கின்றது.

இன்னொரு புறத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு குறித்து வெளிநாடுகள் சில அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும் தெரிவிக்கும்போது அன்றி அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளும்போது அதனை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகக்கூறி தடுத்து நிறுத்தி விடுகின்றது. நிலைமை ஓரளவு பாதகமாக இருப்பின் தீவிர வலது சாரிகளைத் துண்டிவிட்டு முயற்சிக்கும் நாடுகளின் செயற்பாடுகளை முடக்கி விடுகின்றது.

சிறிலங்கா அரசின் அணுகுமுறைக்கு மேற்குலகத்தை சிறிலங்கா அரசு கையாளும் முறையே சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். ஒரு புறத்தில் மேற்கு நாடுகளின் உதவிகளைப்பெற்றுக்கொள்வதிலும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பிற்கும் பெரிதும் எதிர்பார்த்தும் சிறிலங்கா அரசு இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அந்நாடுகளின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதாகஇல்லை.

இதேவேளை சிறிலங்கா அங்கீகரிக்கப்பட்ட அரசு என்ற ரீதியில் அதனுடன் நெருக்கமான இராஜீக உறவுகளைப்பேணும் வேறு அரசுகள், சர்வதேச அமைப்புக்கள் என்பனவும் இறைமையுள் அங்கீகரிக்கப்பட்ட அரசு என்ற ரீதியில் சிறிலங்கா அரசு புரியும் ஒடுக்கு முறைகளுக்கும் அங்கீகாரம் அளிக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உணர்வுகளை அரசின் வழிமுறையிலேயே வெளிபடுத்துகையில் அவற்றுக்கு புதுவடிவமும், புது அர்த்தமும் கொடுக்க முயல்கின்றன. அரசின் இராணுவம் மக்களை கொன்றால் அதனை பாதுகாப்பு நடவடிக்கை என்கின்றனர். ஆயுதப்படையின் நடவடிக்கைக்கு எதிர்நடவடிக்கை மேற்கொண்டால் அதனை பயங்கரவாதம் என்கின் றனர். ஆயுதப்படையினர் புரியும் படுகொலைகளுக்கு நாட்டைப் பாதுகாத்தல் என அங்கீகாரம் அளிக்கின்றனர். இந் நிலையில், ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்பு என்பது இன்று கோள்விக் குள்ளானதாகவே மாறியுள்ளது.

# கன்னாரிழை பாவனையைத் தடுப்போம்; தமிழீழ சுகாதாரசேவை வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கன்னாரிழை (அஸ்பெஸ்ரஸ்) பாவனையைத் தடுப்போம். பாவனை யில் உள்ளவற்றை படிப்படியாக் அகற்றுவோம் என தமிழீழ சுகாதார சேவையினர் மக்களுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

அவ் வேண்டுகோளில் கன்னாரிழை பயன்படுத்துவதன் மூலம் ஒருவித சுவாசத்தொற்றுநோய் ஏற்படுவதாக 1800களில் உணரப்பட்டது. ஆனால் 1906ஆம் ஆண்டளவில்தான் இங்கிலாந்தில் இத் தாக்கம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளிலும் இதன் தாக்கம் உணரப் பட்டுள்ளது இதன் பின்னர் பாவனை குறைக்கப்பட்ட போதும் 1980ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் வருடம் ஒன்றுக்கு இதன் தாக்கத்தால் நோயுற்று மரணமடைந்தவர்கள் பத்தாயிரம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.அதன் பின்னர் தான் அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் கன்னாரிழை தடை செய்யப்பட்டது.

21ஆம் நூற்றாண்டில் எமது பிரதேசங்களில் இதன் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதன்தாக்கம் 10,20 வருடங்களின் பின்னர் உணரக்கூடியதாக இருக்கும். அதாவது மாற்றமுடியாத சுவாசத் தொற்று நோய்க்குள்ளாகி எமது மக்கள் இறக்க நேரிடும் எனவே இதனை நாம் கருத்தில் கொண்டு இன்றே கன்னாரிழை பாவனையைத் தடுப் போம். முன்னர் பாவனைக்கு உட் பட்டவற்றை படிப்படியாக அகற்றுவோம் வேறு முறைகளை செய்ற் படுத்துவோம். என சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

# மின்சார சபையை தனியார் மயமாக்க அரசாங்கம் மீண்டும் முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபையை தனியார் மயமாக்க அரசு மீண்டும் முயற்சிகள் மேற்கொள்வதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.மின்சார சபையின் தொழிலாளர் சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால் இதுதொடர்பாகக் கூறுகையில்:

மின்சாரசபையை ஏழு நிறுவனங்களாகப் பிரிக்கும் முயற்சி முன்னர் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மின்சாரசபை மறுசீரமைகப்படாது என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித் திருந்தார். ஆனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததன் பேரில் தனியார் மயமாக்கலைக் கைவிடும் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.மின்சார சபையை தனியார் மயமாக்கும் முயற்சியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று அவர் கூறினார். இதேவேளை மின்சார சபையின் புதிய தலைவரான மொக்செவி பேர்லிஸையும் இது தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

## திருத்தம்

நேற்றைய ஈழநாதம் நளேட்டின் 5-ஆம்பக்கத்தில் வெளிவந்த "சூழல் பாதுகாப்பு நாள்" தொடர்பான படங்களுக்கான தலைப்பில் "உலக சூழல் தினம்" என தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

# அனல்மின்திட்டத்தை ஆட்சேபித்து நேற்று புத்தளத்தில் எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் நுரைச்சோலை பிரதேசத்தில் அரசாங்கம் அமைக்கத் திட்டமிட்டுள்ள உத்தேச அனல் மின் நிலையம் அந்தப் பகுதியில் அமைக்கப்படுவதை எதிர்த்து மக்கள் நேற்று எதிப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர். இந்தக் திட்டத்திற்கு எதிப்புத் தெரிவித்து நுரைச்சோலை முதல் கற்பிட்டி வரையான பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்படிருந்தன. நுரைச்சோலை இலந்தையடிப் பகுதியில் அமைக்கப் படவுள்ள இந்த அனல்மின் நிலையம் காரணமாக பிரதேசத்தின் கடற்றொழில், விவசாயம், உப்பு உற்பத்தி என்பன பாதிக்கப்படலாம் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (32)

# இன,மதவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து சு.க.வை ராஜபக்ஷ காட்டிக்கொடுத்து விட்டாராம்

(கொழும்பு)

இனவாதிகளுடனும் மதவாதிகளுடனும் கூட்டுச் சேர்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுத்துள்ளதாக அந்த கட்சியின் கலிகமுவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கலிகமுவ பிரதேச சபையின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான எல்.ஆர் வீரசேன ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துக் கொண்டபோதே இதனைத் தெரிவித்துள்ளார். பிரதமரிடம் நிரந்தர கொள்கை ஒன்று இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு முல்லை மாவட்ட இளையோர் மாநாடு

தமிழீழ பெண்கள் எழுச்சி[illegible] முன்னிட்டும் 2ஆம் லெ[illegible] நினைவு நாளை மு[illegible]டும் முல்லை மாவட்ட இளையோர்களுக்கான மாநாடு நாளை முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் 50பேர்கலந்து கொள்ளவுள்ள இம் மாநாடு முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியின் அனுசரணையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (20)

# வாக்காளர் பாதுகாப்புத் தொடர்பாக பவ்ரல்– படையதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

வடகிழக்கு பிரதேச வாக்காளர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு படையதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

வாக்களிக்க வரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார். வாக்குச் சாவடிகளுக்கு 500 மீற்றர் தொலைவில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வாக்காளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

இதேவேளைவடக்கு கிழக்கு பிரதேசத்தில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளில் தென் பகுதியைச் சேர்ந்த ஒருவரையேனும் கடமையில் ஈடுப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. கூட்டமைப்பினர் அண்மையில் தேர்தல் ஆணையாளரை சந்தித்த போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# சனாதிபதி சந்திரிகா நாடு திரும்பினார்

பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடைபெற்ற யுனெஸ்கோவின் 33ஆம் வது மாநாட்டில் கலந்துக் கொள்ளச் சென்றிருந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார்.யுனெஸ்கோ மாநாட்டில் கலந்துக் கொள்ள பிரான்ஸ் சென்றிருந்த சனாதிபதி அந்த நாட்டின் சனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் பிலிப் டவுஸ்ரி மற்றும் பிரான்ஸ் சோசலிசக் கட்சியின் தலைவர் உட்பட உயரதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிதாக சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.(32)

# தமிழீழ கடற்படையின் துணைப்படை நான்காவது அணியின் பயிற்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ கடற்படையின் நான்காவது துணைப்படை அணியினருக்கான பயிற்சி நேற்று ஆரம்பமானது.

லெப்.கேணல் கங்கையமரன் பயிற்சிப்பாசறையில் ஏற்கனவே யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று துணைப்படை அணியினர் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியநிலையில் நேற்று நான்காவது அணியினருக்குப் பயிற்சிகள் ஆரம்பமாகின.

யாழ்.மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்குட்பட்ட130 பேர் இப் பயிற்சி அணியில் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சிகளை ஆரம்பிக்கும் முகமாகபொதுச்சுடரினை தமிழீழ கடற் படையின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செஞ்சேரன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் கடற்படையின் யாழ்மாவட்டத்தளபதி கலாத்தன் (சலீம்)ஏற்றிவைத்தார். அடுத்து லெப்.கேணல் கங்கையமரனின் திருவுருவப்படத்திற்கு சுடரினை திருமலை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசமேலாளர் குட்டி ஏற்றிவைக்க, பயிற்சி அணியினருக்கான பயிற்சி ஆசிரியர் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தமிழீழ கடற்படையின் யாழ்.மாவட்டத்தளபதிஉரை நிகழ்த்தியதோடு பயிற்சிகளையும் ஆரம்பித்துவைத்தார். (ச)



# கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சுகாதாரக் கண்காட்சி

கிளிநொச்சி சுகாதாரப் பணிமனை நடாத்தும் சுகாதாரக் கண்காட்சி கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 9.00 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்



வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.முதன்மை கண்காட்சி மண்டபத்தினை கிளிநொச்சி பிரதிமாகான சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தசத்தியமூர்த்தி நடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

போசாக்குக் குறைபாட்டு நோய்களும், கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகளுக்கான மேலதிக போசாக்கு உணவான சோளம், சோயாமாவின் பயன், பாவனை பற்றியவிளக்கம், காசநோய், விபத்து மற்றும் தற்கொலை, தெரு நாய்களும் நீர் வெறுப்பு நோயும் ஆகியன பற்றிய விளக்கங்களையும், தீவுகளையும் வழங்கும் வகையில் இக்கண்காட்சி அமைந்துள்ளது. இன்றும் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது. காலை 9.00 மணி முதல் மாலை5.30 மணிவரை கண்காட்சி இடம் பெறுகிறது.

# தமிழ்இளைஞர் சுட்டுக்கொலை

இத்தாலியில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கடந்த வியாழக்கிழமை காலை ஆறு மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.


ஒரு வீட்டில் பணியாற்றிய இவரை வீட்டின் சொந்தக்காரர் சுட்டுக் கொன்றுள்ளார். குறிப்பிட்ட வீட்டின் சொந்தக்காரரான ஜோர்ஜோ பனி (வயது 62)என்பவர் சம்பவ நேரம் தனது மனைவியை (வயது 63) தலையின்பின் புறத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார்.துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்கேட்டு அவ்விடத்திற்கு வந்த மேற்படி இளைஞரையும் துப்பாக்கியால் சுட்டபோது காய மடைந்த அவர் தப்பிஓடி தனது அறைக்குள் புகுந்து கதவைப் பூட்டிக் கொண்டார். அவரைத் துரத்திச்சென்ற மேற்படி நபர் துப்பாக்கியால் அறைக் கதவைச் சுட்டுத்திறந்து இளைஞரையும் சுட்டுக்கொன்றுள்ளார்.பின்னர் மூன்றுமணி நேரத்தை மதுபானசாலையில் செலவிட்ட அவர் பின்னர் தனது வக்கீலிடம் சம்பவம் பற்றிக் கூறியிருக்கிறார். கொலையாளி தற்போது மனநலவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐரோப்பிய...

அமைதிப் பேச்சுக்களில்ஒரு தரப்பினராகிய சிங்களத் தரப்பின் குற்றச்சாட்டுக்களை வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தது பாரபட்சமானது அநீதியானது என்று தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றம் சாட்டியிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியமானது உண்மை நிலைகளைக்கண்டறிய குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என்றும் நோர்வே தூதுவருடனான அண்மைய சந்திப்பின் போது சு.ப. தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பூகம்பம் தாக்கிய பகுதி




## பாலியல்...

சட்டங்களால் இருட்டறையாக்கப்பட்டனர். கணவனை இழந்தவள் என்றும், கற்பிழந்தவள் என்றும், சமூகத்தினால் முத்திரை குத்தப்பட்டாள், நடைப்பிணமான வாழ்விலும் இருத்தலுக்கானதேவை இருந்தமையினால் வாழத் தலைப்பட்டாள். அவளது வாழ்வு பூமிக்குப் பாரமாகாது புரட்சிக்கு வித்திட்டது.

இன்றைய சமாதான காலத்திலும் அதற்கு முன்னரான செயற்பாடுகளிலும் பெண்களுக்கான சட்டங்கள் நடைமுறைச் சாத்தியப்பாடற்றே காணப்படுகின்றன. பெண்களுக்கான பாதுகாப்புப் பற்றிய சட்டங்கள் இலங்கையின் கலாச்சார விழுமியங்கள், பண்பாடுகளுக்கேற்ப வகுக்கப்பட்டுள்ளன. எனினும் அரசு எவ்வாறு உலக வங்கியின் கல்விக்கொள்கையைவலிந்து புகுத்தியுள்ளதோ அவ்வாறே பெண்களது சட்டம் தொடர்பிலும் வெளிநாட்டுக் கலாச்சாரப்போக்கை கையாளுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத் தாழ்வுமட்டத்தைக் கருதியும், அதற்கான ஊடகமாக சுற்றுலாத் துறையினை வளர்க்க ஏதுவாக அரசு மேற்கொள்ளும் சட்ட மறுசீரமைப்பை உடன் நிறுத்துமாறு கோருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## வவுனியாவில்...

இங்கு உரையாற்றிய வன்னி பாரா்ளுமன்ற உறுப்பினர்செல்வம் அடைக்கலநாதன், இன்று பெண்கள் அனைத்து பதவிகளையும் வகித்து வருகின்றார்கள். அதே போன்று தம்மாலும் எல்லாம் சாதிக்க முடியும் என்று நிரூபித்து காட்டியுள்ளனர். இதில் தமிழீழ பெண்கள் அனைத்து சமூகத்தினருக்கும் முன்னுதாரணமாக இருக்கிறார்கள். எனினும் எமது சமுதாயத்திலும் ஆணாதிக்கம் இன்றும் இருக்கத்தான் செய்கிறது. இந்த முட்டுக்கட்டையில் இருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்றால் அவர்கள் மனதளவிலும் கலாச்சாரத்திலும் இருந்தும் வெளியேற வேண்டிய தேவையுள்ளது என்று தெரிவித்தார். (21)

## கனகராயன்...

கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் வேகமாக மோதியதில் பெரியகுளம், கனகராயன் குளத்தைச் சேர்ந்த 12 வயதையுடைய செல்வராசா செல்வகுமார் எனும் சிறுவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த 14 வயதுடைய பிரேம்குமார் நிரஞ்சன் என்பவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்து வந்த சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தகவல்களை பெற்றுள்ளதோடு விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை உயிரிழந்த இரு சிறுவர்களின் உடல்களும் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (ச.லோ)

## 2ஆம் லெப்...

என்னும் நாடாகம் சிறப்பு அம்சமாக மேடை ஏற இருக்கின்றது.

கிளிநொச்சியில் காலை ஒன்பது மணிக்கு கிளி. இரணைமடுச்சந்தியில் மாலதியின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பாண்ட் அணிவகுப்புடன் மாலதியின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறும்.மாலை நிகழ்வுகள் பாண்ட் அணிவகுப்புடன் 5.00 மணிக்கு பளை பொதுமைதானத்தில் ஆரம்பமாகும் எனவும் பெண்கள் மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது. (லோ,ச,24)

## பாக்.இல்...

300 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர்.பெருமளவானோர் காயமடைந் துள்ளனர். ஆயிரத்தி ஐந்நூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் கற்குவியல்களாகவும், மண்மேடு களாகவும் காணப்படுகின்றன. இடிபாடு களிலிருந்து பலியானவர்களையும் காய மடைந்தவர்களையும் மீட்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இந்நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.6 ஆக பதிவாகியுள்ளது. இந் நிலநடுக்கம் இந்திய உபகண்டம் எங்கும் உணரப்பட்டுள்ளது. பலியானவர்களின் தொகை மேலும் ஆயிரக்கணக்கில் இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இஸ்லாமபாத் நகரிலிருந்து 95 கிலோ மீற்றர் தொலைவில் வடகிழக்குத் திசையாக பாரிய நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் அடுக்குமாடிக் குடியிருப்புக்கள் ஏராளமானவை இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இடிபாடுகளில் சிக்கி மேலும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. சிலமணி இடைவேளையின் பின் தொடர்ந்து ஐந்துமுறை பாகிஸ்தானில் நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. ராவல் பிண்டியில் இரண்டு பள்ளிக்கூடங்கள் இடிந்து விழுந்தன. பஞ்சாப் மாகாணத்தில் பல கிராமங்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் கூறினார். நில நடுக்கம் மையம் கொண்டிருந்த முஷரபாத் பகுதிகளிலும்சேதம் மிக அதிகமாக இருப்பதாக இதனை உலங்குவானூர்தி மூலம் பார்வையிட்ட அதிபர் முஷாரப்பின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரத்தை எட்டும் என்று அஞ்சப்படுவதாகவும் அவர் கூறினார். வட இந்தியாவில் பாகிஸ்தானை உலுக்கி எடுத்த நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக நேற்று ஒரே நாளில் அடுத்தடுத்து ஐந்து முறை பூமி அதிர்ந்துள்ளது. பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் தலைநகரான முஷரபாத் பகுதியை மையமாகக்கொண்டு காலை சரியாக 9.17 மணிக்கு முதல் நில நடுக்கம் உருவானது. இதற்கு ஏறத்தாழ அரை மணி கழித்துமீண்டும் ஒருமுறை பூமி அதிர்ந்தது. இம்முறை 5.3 புள்ளி ரிச்டர் அளவு கோலில் உணரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 10. 45 மணிக்கு 5.1 என்ற அளவுடன் பூமி அதிர்ந்தது. பின்னர் 10.56 மணிக்கு 5.5 என்ற அளவிலும் இறுதியாக 12.15 மணிக்கு 5.1 என்ற அளவிலும் நில நடுக்கங்கள் ஏற் பட்டன.

இந்த நிலநடுக்கங்கள் முஷரபாத்தில் காடுகள் நிறைந்த மலைப்பகுதியினை மை யமாகக் கொண்டே ஏற்பட்டுள்ளன. இதனால் சுனாமிப் பேரலை ஏற்பட வாய்ப்பில்லை என்று புவியியல் நிபுணர்கள் விளக்கமளித்துள்ளனர். வட இந்தியா, பாகிஸ்தான் தவிர ஆப்கானிஸ்தான்,துர்க்கிஸ்தான், ஆகிய நாடுகளிலும் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது.

பூமி அதிர்வால் ஜம்மு கஷ்மீரில் பல இடங்களில் நிலச் சரிவுகள் ஏற்பட்டன. சிறிநகரில் முஷரபாத் நெடுஞ்சாலை உள்ளிட்ட முக்கியசாலைகள் அடியோடு துண்டிக்கப்பட்டன. எல்லைப் பகுதியான யூரியில் 80 சதவீத கட்டடங்கள் சின்னாபின்னமாகின. யூரி மருத்துவமனை முற்றிலும் மண்ணோடு மண்ணாகப் புதைந்துள்ளது. பாரமுல்லா. பூஞ், குப்பாரா மாவட்டங்களும் உருக்குலைத்துள்ளன. இங்கு இராணுவத்தினர் முழு வீச்சில் மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இது வரை நாற்பது இராணுவ வீரர்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்டோர் ஜம்முகாஷ்மீரில் பலியாகியுள்ளனர். இடிபாடுகளில் இன்னும் ஏராளமானவர்கள் சிக்கியுள்ளனர்.

நிலநடுக்கத்தால் புதுடில்லியில்பொது மக்கள் இடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. சுமார் ஒரு நிமிட நேரத்திற்கு நேற்றுக் காலை நில நடுக்கம் உணரப்பட்டது. அப்போது கட்டடங்கள் குலுங்கின. பொருட்கள் உருண்டு விழுந்தன. இதைக்கண்ட மக்கள் வீடுகளிலும், அலுவலகங்களிலும், இருந்து வெளியேறி சாலைகளிலும், மைதானங்களிலும்தஞ்சம் புகுந்தனர். கசியானா உத்தரப் பிரதேசம் ராஜஸ்தான் கிராமத்தில் பிரதேசம் உட்பட்ட மாநிலங்களில் ஒரு சில இடங்களில் நேற்றுக் காலை நில நடுக்கம் உணரப்பட்து. பூமி அதிர்வால் அம் மாநிலங்களிலும் பல வீடுகள்உருக்குலைந்துள்ளன. பஞ்சாப்பில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் அமிர்தசரஸ் நகரில் பல கடைகள் தீப்பற்றி எரிந்தன அமிர்தசரஸ். பெரஸ்பூர் உட்பட பஞ்சாபின் பல இடங்களில் பிற்பகல் மீண்டும் பூமி குலுங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர். சண்டிகரில் நில நடுக்கம்ஏற்பட்டபோது காங்கிரஸ் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. உடனே கூட்டம் நடைபெற்ற பஞ்சாப் மாளிகையில் இருந்து பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ்தலைவி சோனியாகாந்தி உள்ளிட்டோரை பாதுகாப்பானதிறந்தவெளி மைதானத்திற்கு அவசர அவ சரமாக கொண்டு சென்றனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.